விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 12 திங்கட்கிழமை (26.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 038

# 100 நாள் திட்டத்தை ஆதரிக்க கட்சிகளுக்கு பகிரங்க அழைப்பு

## ஜனாதிபதி விடுத்தார்



*(கொழும்பு)*

*புதிய அரசாங்கத்தின் 100 நாள் திட்டத்திற்கு ஆதரவளிக்கப்ப வேண்டுமென சகல அரசியல் கட்சிகளுக்கும் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தமக்கு எதிராக வாக்களித்த தரப்பினரிடம் பழிவாங்கும் எவ்வித உத்தேசமும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.*

23ஆம் பக்கம் பார்க்க....

## ஸ்ரீ.சு.கவின் செயலர் ராஜித சேனாரத்ன!



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவை நியமிப்பது குறித்து கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆராய்ந்து வருவதாக தெரியவருகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசாங்கத்தில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் விலகி, அவரை ஜனாதிபதித் தேர்தல் வெற்றிப்பெற செய்ய ராஜித சேனாரத்ன பெரும் பங்காற்றினார்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, இதற்கு முன்னர் இலங்கை மக்கள் கட்சி, வெகுஜன சுதந்திர

24ஆம் பக்கம் பார்க்க....

## எரிபொருட்களின் விலை மேலும் குறைவடையும்?

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை மேலும் குறைவடையுமென பொருளாதார பிரதியமைச்சர் ஹர்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளம் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் 5 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ள நிலையில் குழந்தைகளுக்கான பால்மா உட்பட குழந்தைகளுக்கான உணவுகளின் விலைகள் குறைக்கப்படும்.

இதேவேளை, எரிபொருட்களின் விலை மேலும் குறைக்கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் 29ஆம் திகதி நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் ஹர்ஷ குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த 21ஆம் திகதி நள்ளிரவு அமுலுக்கு வரும்வகையில எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## பிரதம நீதியரசர் பதவி விலக வேண்டும்

### சட்டத்தரணிகள் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான அன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் ஆட்சியில் நீடிக்க சதி செய்தார் என்கிற குற்றச்சாட்டை எதிர்கொள்ளும் நிலையில்

23ஆம் பக்கம் பார்க்க....



## காஸின் விலை குறையும்?

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலையைக் குறைப்பது தொடர்பில் எதிர்வரும் சில தினங்களில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக உணவுப் பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 29-ம் திகதி தற்போதைய அரசின் இடைக்கால வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

24ஆம் பக்கம் பார்க்க....

## சின்னத்தில் இழுபறி நிலை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது போட்டியிடவுள்ள சின்னம் குறித்து பிரதான கட்சிகளில் முரண்பாடுகள் தோன்றி இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

பெரும்பாலும் எதிர்வரும் ஏப்ரல மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது ஐக்கிய தேசிய கட்சியும், அதனுடன் இணைந்த சிறு கட்சி

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆட்சியை கைப்பற்ற இராணுவத்துக்கு உத்தரவிட்டார் கோத்தபாய ராஜபக்ஷ

### மேர்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் அலுவலகம் மற்றும் தேர்தல் சம்பந்தப்பட்ட இடங்களின் அதிகாரத்தை பிடிக்குமாறும் இர்ராணுவம் அவற்றுக்குள் செல்லும் போது எந்த இராணுவப் படைப் பிரிவு என்பதை அடையாளம் காண முடியாதபடி சீருடையில் இருக்கும் பதக்கங்களை அகற்றுமாறும் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்ததாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

எனினும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான தினம் இரவு அலரி மாளிகைக்கு சென்றிருந்தவர்களில் சிலர் கோத்தபாயவின் அந்த

24ஆம் பக்கம் பார்க்க....



## ஏப்ரலில் தேர்தல்!

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24 ஆம திகதிக்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும் என அரச நிர்வாகம் மறறும் புத்தசாசன அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

அந்த தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இரண்டு

24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய கூட்டமைப்பு மகிந்தவுக்கு அழைப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் கூட்டமைப்பிற்கு தலைமை தாங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் போது போட்டியிடுவதற்கு புதிய அரசியல் கூட்டமைப்பு ஒன்று இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது.

சில அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து தேர்தலில் போட்டியிட திட்டமிட்டுள்ளன.

மக்கள் ஐக்கிய முன்னணி,

24ஆம் பக்கம் பார்க்க....

## ஒபாமாவை குறிவைக்க இலங்கையர் அனுப்பி வைப்பு

### இந்திய புலனாய்வு அமைப்பு எச்சரிக்கை



(புதுடில்லி)

இந்தியாவுக்கு பயணம் செய்துள்ள அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமாவை இலங்கையைச் சேர்ந்தவர் குறிவைக்கலாம் என்று இந்தியப் புலனாய்வு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் இந்தியாவில் தங்கியுள்ள இலங்கையர்கள் கடும் கண்காணிப்புக்கு

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜெனிவாவில் மார்ச் மாதம் வருடாந்த அறிக்கை தாக்கல்

### இலங்கை குறித்து விபரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் செய்யத் ராத் செய்யத அல் ஹுசைன் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமை பேரவையில் வருடாந்த அறிக்கையை தாக்கல் செய்ய உள்ளார்.

அதில் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறித்த அறிக்கையில் இலங்கையின் மனித உரிமை விசாரணைகள் தொடர்பான முன்னேற்றங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான காலத்தில் நாட்டின் மனித உரிமை நிலைமைகள் மற்றும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்திய விதம்

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கைத் தூதுவர்கள் 27 பேர் நாட்டுக்கு அழைப்பு

(கொழும்பு)

அரசியல் செல்வாக்கில் வெளிநாடுகளில் தூதுவர்களாக நியமிக்கப்பட்ட 27 பேரை ஒரு மாத காலத்துக்குள் நாடு திரும்புமாறு வெளிவிவகார அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு திருப்பி அழைக்கப்பட்டவர்களில் ஜப்பானுக்கான தூதுவரான முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, அவுஸ்திரேலியாவுக்கான தூதுவரான முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் திசர சமரசிங்க, பாகிஸ்தானுக்கான தூதுவரான முன்னாள் விமானப்படைத் தளபதி எயர்மார்ஷல் டொனால்ட் பெரேரா மற்றும் தாய்லாந்துக்கான தூதுவரான முன்னாள் படைத் தளபதி ஜெனரல் சாந்த கொட்டேகொட ஆகியோரும் உள்ளடங்கியுள்ளனர்

அத்துடன், நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மைத்துனர் உதயங்க வீரதுங்க ஆகியோரும் இவ்வாறு கொழும்புக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக அண்மையில் நியமிக்கப்பட்ட பேராசிரியர் சுதர்சன் செனிவிரத்னவும் விரைவில் கொழும்புக்கு திருப்பி அழைக்கப்படவுள்ளார்.

ஆயினும் வெளிவிவகார அமைச்சினால இவ்வாறு திருப்பி அழைக்கப்படும் 27 பேர் கொண்ட முதல் பட்டியலில் அவர் இடம் பெறவில்லை.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் புதுல்லிக்குப் பயணம் மேற்கொள்ளும் வரை பேராசிரியர் சுதர்சன் செனிவிரத்ன இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றுவார் என தெரிவிக்கப்படுகின்றது. (எ-1)

வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

மதச்சார்பற்றது

கைகொடுக்கும் நண்பர்கள்

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776

(சி-9913)

## பரிசளிப்பு விழா

தட்டுவன்கொட்டி கிளி/கண்ணகை அம்மன் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 12.30 மணிக்கு பாடசாலை அதிபர் க.கருணாநந்தன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கலந்து கொள்கிறார், சிறப்பு விருந்தினராக கண்டாவளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் வீ.இராஜகுலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (எ-1)

## காவலாளியை அச்சுறுத்தி தங்க நகைகள் கொள்ளை

### பட்டப்பகலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் காவலாளியை அச்சுறுத்தி 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை நாவலர் வீதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நாவலர் வீதியிலுள்ள கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகாமையி லுள்ள வீடொன்றினுள் புகுந்த 7பேர் கொண்ட கொள்ளையர்கள், வீட்டுரிமையாளர் இல்லாத நிலையில் காவலாளியை அச்சுறுத்தி, தாக்கியுமுள்ளனர்.

பின்னர் அவரிடம் இருந்து வீட்டுத்திறப்பை எடுத்ததுடன் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரினுள் மறைத்து வைத்திருந்த 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இரகசிய கமரா பொருத்தப்பட்டிருந்தமையால் இச்சம்பவம் குறித்த ஆதாரங்கள் வீட்டு உரிமையாளரினால் யாழ். பொலிஸாரிடம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து துரிதமாக செயற்பட்ட யாழ். பொலிஸார் நாயன்மார்கட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை அன்றைய தினம் மாலையே கைது செய்து யாழ்.நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

நீதவான் சந்தேக நபரினை எதிர்வரும் பெப்ரவரி 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் பல திருட்டுக்களுடன் தொடர்புடையவராக இருக்கலாம் என யாழ்.பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளார். (எ-4)

## ஊழல் குற்றச்சாட்டில் விமல் வீரவன்ஸ முன்னிலை!



(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டு வரிசையில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் பெயர முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ச, ஜேவிபியில் இருந்த போது கடவத்தையில் உள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றில் இருந்து வருமானத்தை பெற்றுவந்தார்.

எனினும் 2008ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கிய பின்னர், அவர் பல்வேறு காரணங்கள் கண்டறியப்படாத வருமானங்களின் மூலம் இலட்சாதிபதியாகினர் என்று கடுவல மேயர் ஜி.எச்.புத்ததாஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன் விமல் வீரவன்ச, தமது மனைவியான சசி வீரவன்சவுக்கும் இராஜதந்திர கடவுச்சீட்டை பெற்றுக்கொடுத்துள்ளார்

பொதுவில் அமைச்சர் ஒருவரின் பாரியார் இராஜதந்திர கடவுச்சீட்டுக்கு உரித்துரியவர் அல்லர் என்ற நடைமுறையை மீறியே இந்த கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை தவிர ஆட்பதிவு திணைக்கள அதிகாரிகளை பிழையாக வழி நடத்தி இரண்டு தேசிய அடையாள அட்டைகளையும் சசி வீரவன்ச பெற்றுள்ளார்.

இந்தக்குற்றச்சாட்டுக்கள் குறித்து இலங்கையின் ஊடகம் ஒன்று விமல் வீரவன் சவை தொடர்புகொள்ள முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை. (எ-1)

## காரைநகரிலிருந்து சண்டிலிப்பாய் ஊடாக யாழிற்கு புதிய பஸ் சேவை

### பிரதி அமைச்சர் விஜயகலா ஆரம்பித்து வைத்தார்



(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து அராலி, சங்குவேலி, சண்டிலிப்பாய் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு புதிய பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மகளிர் விவகார பிரதி அமைச்சரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் நேற்று இந்த சேவையை சங்குவேலியில் வைத்து ஆரம்பித்து வைத்தார்.

கடந்த 20 வருடங்களாக இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது. பிரதி அமைச்சராக பதவி ஏற்றுக் கொண்ட திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு காரைநகர் பஸ் டிப்போவில் நேற்றுக் காலை வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பை அடுத்து புதிய பஸ்சேவையை அவர் ஆரம்பித்து வைத்தார்.

இதேபோல் நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி புதிய பஸ் சேவையொன்றை ஆரம்பிக்குமாறு இ.போ.சவின் வட மாகாண டிப்போக்களுக்கான பொறுப்பதிகாரியிடம் பிரதி அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

காரைநகர் பஸ் டிப்போவில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய பிரதியமைச்சர்,

வட மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பருத்தித்துறை, காரைநகர் பஸ் டிப்போக்களை அபிவிருத்தி செய்வதற்கும் பஸ் சேவையை அதிகரிப்பதற்கும் அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாவற்குழி 300 வீட்டுத் திட்டம் 2004 ஆம் ஆண்டு எனது கணவர் மகேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கடந்த ஆட்சியாளர்கள் இந்த வீட்டுத்திட்டத்துக்கான வசதிகள் எதனையும் செய்து கொடுக்கவில்லை. இந்த வீடுகளில் வசிப்பர்கள் கூரைகளற்ற வாழ்வையே வாழ்ந்து வந்தனர். இவர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை பெறுமென்றார். (எ)

இவர்களைக் காணவில்லை



14.01.2015 அன்று புதுஉடுப்பு எடுப்பதற்கு புதுக்குடியிருப்பு சென்ற

**ப. நிஷாந்தி, ப.ஜினுசிகா** இருவரும்

இதுவரை இன்னும் வீடு திரும்பவில்லை.

இவர்களைக் கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்

**0766491758, 0770628633**

**0773405075, 0771012733**

**0774465290**

(C-9925)

## ஐ.தே.க உறுப்பினருக்கு ரணில் எச்சரிக்கை



(கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர்கள் தெரிவின் போது கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள் தொடர்பில், மீள் பரிசீலனை செய்யப்படும் என்று அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது கட்சி எடுத்த தீர்மானத்துக்கு பெரும்பாலான உறுப்பினர்கள் தமது இணக்கத்தை வெளியிட்டனர். எனினும் சிலர் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்டனர்.

இந்தநிலையில் அவர்களை போட்டியிட வைப்பது தொடர்பில் மீள் சிந்திக்க வேண்டியிருக்கும் என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சி பாரிய அர்ப்பணிப்புக்களை செய்தது.

இதன்மூலம் இலங்கையில் புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எதிர்வரும் ஏப்ரலுக்கு பின்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

## ஜனாதிபதி இந்தியா செல்வார்



(கொழும்பு)

பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்திய பயணத்தை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது

ஜனாதிபதி செயலக பேச்சாளர் ஒருவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே கடந்த வாரத்தில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது இலங்கை ஜனாதிபதிக்கான உத்தியோகபூர்வ அழைப்பை இந்தியா விடுத்திருந்தது.

இந்தநிலையில் மங்கள சமரவீர தற்சமயம் அமெரிக்கா மற்றும் சீன நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார். (எ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு திரும்ப விரும்பும் தமிழ் அகதிகளுக்கு நிதியுதவி

## மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை

(கொழும்பு)

**இந்தியாவிலிருந்து இலங்கை திரும்ப விரும்பும் அகதிகளின் குடும்பத்திற்கு, மத்திய, மாநில அரசுகள் மூன்று இலட்சம் ரூபா நிதி (இந்திய ரூபாய்) வழங்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதுகுறித்து அகதிகள் மறுவாழ்வு ஆணையர் நாளை அகதிகளிடம் கருத்து கேட்கவுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.**

கடந்த 1983 ஆம் ஆண்டு முதல், இலங்கையில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்ததும், இரண்டு இலட்சம் தமிழர்கள் அகதிகளாக தமிழகத்திலும், வெளிநாடுகளிலும் தஞ்சமடைந்தனர். தமிழகத்தில் உள்ள 116 முகாமில், 1.20 இலட்சம் அகதிகள் தங்கியுள்ளனர். இவர்கள் குடும்ப செலவுக்காக 3.25 ரூபா கோடியும், மின்சாரம், உணவுப்பொருட்களுக்காக 70 இலட்ச ரூபாவும் மத்திய, மாநில அரசுகளால் மாதந் தோறும் செலவிடப்படுகிறது.

இது அகதிகளுக்கு போதுமானதாக இல்லை. தற்போது, இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமும், வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் நாடு திரும்பினால், அவர்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கிட தற்போதைய அரசு தயா ராக உள்ளது என்ற இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் யோகே ஸ்வரனின அறிவிப்பும், தமிழகத் தில் உள்ள அகதிகளுக்கு மகிழ்ச்சி அளித்துள் ளது.

இந்நிலையில், இலங்கை திரும்ப விரும்பும் அகதிகள், அங்கு தொழில் தொடங்கவும், அடிப்படை வசதிகளுக்காகவும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 இலட்சம் ரூபா வீதம் பணம் அல்லது தேவையான பொருட்கள் வழங்கிட மத்திய, மாநில அரசுகள் திட்டமிட்டுள்ளன.

இதற்காக, அகதிகளிடம் கருத்து கேட்க, மாநில அகதிகள் மறுவாழ்வுத்துறை ஆணையர் நாளை 27 ஆம் திகதி மண்டபம் முகாமிற்கு செல்லவுள்ளதாக உளவுத்துறையினர் தெரிவித்தனர். இது குறித்து திருகோணமலை யைச் சேர்ந்த அகதி ப. வரதன் கூறியதாவது,

இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தால், தமிழர்களுக்கு நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால் நாங்கள் அங்கு சென்றால் அன்றாட தேவைக்கு யாரிடம் உதவி கேட்பது? இந்திய-இலங்கை அரசுகள் இணைந்து எங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உத்தரவாதம் அளித்தால், இலங்கைக்கு செல்வோம் என தெரிவித்துள்ளார். (இ-5)

## பொதுத் தேர்தலில் போட்டியிட முதலமைச்சர்கள் விருப்பமாம்

### ஹரின், தயாசிரி அறிவிப்பு



ஹரின்



தயாசிரி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட எதிர்பார்ப்பதாக வட மேல் மாகாண முதலமைச்சர் தயாசிரி ஜயசேகர தெரிவித்துள்ளார். அவர் தேசிய அரசாங்கத்தில் இருப்பதற்காக பாராளுமன்ற தேர்தலில் போட்டி யிட தீர்மானித்துள்ளதாக தெரிவிததார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்திற்கு தெரிவான தயாசிறி ஜயசேகர 2013 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலிருந்து இராஜினாமா செய்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பிரதிநித்துவப்படுத்தி வடமேல் மாகாண சபைக்காக போட்டியிட்டார்.

அதிகபடியான வாக்குகள் பெற்று வடமேல் மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் தான் போட்டியிட்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு பலத்தை பெற்றுக்கொடுக்க போவதாக ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் நாடாளுமன்றத திற்கு செல்வதா? அல்லது மாகாண சபையில் இருப்பதா? என்பது குறித்து தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் அவர் இதனை கூறியுள்ளார். புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் பின்னர் நடத்தப்படும் பொதுத் தேர்தலில் நான் போட்டியிடுவேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து விட்டு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட போது பலர் என்னை ஏளனம் செய்தனர். நாடாளுமன்றத்திற்கு நான் வருவேன் என்று அன்று நான் கூறியது உண்மையாக மாறவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வடக்கு கத்தோலிக்க ஆயர்கள் கோரிக்கை

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வடக்கு கத்தோலிக்க ஆயர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண கத்தோலிக்க மதகுருமார்கள் கூட்டாக இணைந்து இந்த கோரிக்கையை விடுத்துள்ள னர். ஆயிரக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வெள்ளை வான்களில் கடத்தப்பட்டவர்கள், இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்தவர்கள், கைது செய்பய்பட்டவர்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கைகள் அடங்கிய எழுத்து மூல ஆவணமொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நூறு நாட்கள் திட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பிலான பிரச்சினைக்கும் தீர்வு வழங்கப்படும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார். (இ-5)

## உப தலைவராக எஸ்.பி.நியமனம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவராக முன்னாள் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது பொதுவேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தகாத வார்த்தைகளால் சாடியிருந்தார். மேலும் தேர்தல் பிரசார கூட்டமொன்றில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் தகாத வார்த்தைகளால்பேசியிருந்தார்.

இந்நிலையிலேயே எஸ்.பி. திஸாநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## லக் சதொச தொடர்பில் ஆராய விசேட குழு

லக் சதொசவில் இடம்பெற்றதாக கூறப் படும் முறைகேடுகள் மற்றும் ஊழல தொடர்பாக விசாரிப்பதற்கு விசேட குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக உணவு பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார். இந்தக் குழுவில் ஓய்வுபெற்ற நீதிபதிகள், கணக்காய்வு அதிகாரிகள் மற்றும் வருமானவரி அதிகாரிகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவிததார்.

இது தவிர உணவு உட்பட பல்வேறு நிறுவனங்கள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்வதற்காக மற்றுமொரு குழுவும் நியமிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-5)

## இராசி பலன்

26.01.2015

தை 12, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு

சஷ்டி காலை 6.40 மணிவரை

சப்தமி பின்னிரவு 4.51 மணிவரை

ரேவதி மாலை 5.38 மணிவரை

ராகுகாலம் 8.06- 9.36 மணிவரை

சுபநேரம் 12.36-2.06 மணிவரை

வளவன்

**மேடம்:** தொழிலில் புதிய மாற்றங்களை செய்யும் எண்ணம் உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், கொடுக்கல்-வாங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நன்மையுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசு வழியில் அனுகூலமான சம்பவங்கள் இடம் பெறலாம், வழிபாட்டில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**கடகம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், உடல் நலம் சீராகும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வருமானம் வருவதற்கு முன்னே செலவுகள் அதிகரிக்கும், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி:** பெண்களின் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள்.

**துலாம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உடல் நலனில் உற்சாகம் பிறக்கும், மறைமுக எதிர்ப்புக்கள் விலகும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள்.

**விருச்சிகம்:** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்து விழாக்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், வாகன சுகமுண்டு, பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், குடும்பத்தில் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும்.

**கும்பம்:** நன்மைகள் நடைபெறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கைக்கு அடித்தளமிடுவீர்கள், உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**மீனம்:** திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல படியாக முடிவடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கோலாகலமாக நடைபெற்ற 6வது சர்வதேச கண்காட்சி











யாழ்ப்பாணத்தில் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி கடந்த 23 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா முன்பாகவுள்ள திறந்தவெளி அரங்கில் இடம் பெற்றது.

முதலீட்டாளர்கள், வியாபார பிரமுகர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் சந்திக்கும் நிகழ்வாக இந்த கண்காட்சி அமைந்துள்ளதுடன், வெளி பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வியாபார பிரமுகர்களை கவர்ந்திழுக்கும் ஒரு கண்காட்சியாகவும் அமைந்துள்ளது. இக் கண்காட்சியின்போது பெருமளவான பார்வையாளர்கள் கலந்து கொண்டிருந்ததுடன் காட்சிகூடங்களை சேர்ந்தவர்களுக்கு தாம் எதிர்பார்த்ததைவிட பெருமளவானோர் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை நடைபெற்ற கண்காட்சியின் போது நிர்மாணத் துறை, விருந்தோம்பல் துறை, உணவு, பானம் மற்றும் பொதியிடல் துறை, வாகனத்துறை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை, நிதிச் சேவைகள் துறை, ஆடைத்துறை, விவசாயத்துறை, நுகர்வோர் பொருட்கள் துறை மற்றும் மேலும் பல துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த பிராந்தியத்தை சேர்ந்தவர்களுக்கும் நாட்டின் ஏனைய பிரதேசங்களை சேர்ந்தவர்களுக்கும் சிறந்த சந்திப்பு பகுதியாக இந்த கண்காட்சி அமைந்துள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவிக்கையில்,

கடந்த 3 தசாப்தங்களாக அழிவுகளைச் சந்தித்த தமிழ்ச் சமூகம் மீண்டெழக்கூடிய நிலையில் உள்ளது.

வடக்கு மாகாணத்துக்கான பொருத்தமான பொருளியல் சார்ந்த, வேலைவாய்ப்பு, உழைப்பு சார்ந்த ஒட்டுமொத்த அபிவிருத்தி திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றார்.

இதேவேளை தொழிற்துறை சார்ந்த அபிவிருத்திகளில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தொடர்புகள் மேலும் வலுப்படுத்தப்படும் அதேவேளை, இலங்கையில் தரமான உற்பத்திகளை செய்யக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும் என யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதர் ஆ.நடராஜன் தெரிவித்தார்.

யாழ்.வர்த்தக கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதாரமே நாட்டின் முதுகெலும்பு. இது எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். இதுபோன்ற வர்த்தக கண்காட்சிகள் அதற்கு உதவும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பொருளாதார ரீதியாக இந்தியாவின் பங்களிப்பு அதிகமாகவுள்ளது. இந்த உறவு மேலும் வலுப்படுத்தப்படும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்பு வழங்கக்கூடியதாக இதுபோன்ற கண்காட்சிகள் வாய்ப்பை ஏற்படுத்தும்.

இந்தியாவின் பொருளாதாரத்தில் தற்போதைய அரசு மாற்றுத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

அதைப்போன்று இலங்கையிலும் பின்பற்றினால் பெரியளவில் [illegible] முடியும் எனவும் தெரிவித்தார்.







## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.43 | 134.25 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 196.69 | 202.31 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 148.46 | 153.35 |
| சுவிஸ் பிராங் | 150.05 | 155.58 |
| கனேடிய டொலர் | 105.59 | 109.08 |
| அவுஸ்திரேலிய டொலர் | 104.46 | 108.62 |
| சிங்கப்பூர் டொலர் | 97.73 | 100.90 |
| ஜப்பான் யென் | 1.10 | 1.13 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.14 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.89 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,513.86 | 7,276.63⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,248.03 | 4,078.89⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4,462.460 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** ஹலமடு(1250.00), சிலோன் பிறின்டர்ஸ் (2399.00), பிரின்ட் கெயார்(42.90), கென்வீனியன் பூட்(303.40), சலிமர்(2189.00).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** செரன்டிப் இன்ஜி(18.40), பிசி ஹவுஸ் (0.20), சிரஸ் லிசர்(0.90), அஸ்ஹொட் ஹோல்டிங்(48.90), சிரஸ் [illegible] பிட்டிய(4.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மகனைத் தாக்கியது மகிந்தவின் மகன்தான்

## புலம்புகிறார் மேர்வின் சில்வா



**(கொழும்பு)**

**கொழும்பில் ஒடேல் ஆடை விற்பனை நிலையம் மற்றும் இரவுநேர களியாட்ட விடுதி ஆகியவற்றில் தனது மகன் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் முன்னாள் ஜனாதிபதியின் புதல்வர் யோஷித ராஜ பக்ஷவுக்கு தொடர்பிருப்பதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பிலிருந்து வெளியாகும் வாராந்த செய்தி பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.**

தனது மகனான மாலக்க சில்வா, யோஷித ராஜபக்ஷவின் பாதுகாப்பாளர் ஒருவருக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். இதன் காரணமாகவே யோஷித ராஜபக்ஷ தனது மகனை தாக்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி இந்த தாக்குதல் சம்பவம் குறித்த செய்தியை தாமதமாக அறிந்து கொண்டதாகவும் இதனையடுத்து அவர் தனது மகனை பார்க்க 45 நிமிடத்திற்குள் வைத்தியசாலைக்கு வந்ததாகவும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் இருந்த கண்காணிப்பு கமராக்களில் பதிவான காட்சிகள் அழிக்கப்பட்டிருந்தன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தமிழ்- முஸ்லிம் பிரிந்து செயற்படும் கலாசாரத்தை நான் வெறுக்கிறேன்

## அமீர் அலி கவலை

(கொழும்பு)

தனக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவியின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் பிரமுகர்களும், அரச அலுவலர்களும் செய்த ஊழல்களை சட்டத்திற்கு முன் கொண்டு வந்து நிறுத்துவதே நூறு நாட்கள் வேலைத்திட்டத்தின் முதற்திட்டம் என வீடமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

தனது அமைச்சுப் பொறுப்புக்களை செத்சிரிபாயவில் உள்ள தனது அமைச்சில் நேற்று முன்தினம் மாலை கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த அமைச்சின் மூலம் நாட்டில் உள்ள மக்களின் கஸ்டங்களில் பங்கு கொள்ள விரும்புவதோடு குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிப்பதோடு கல்குடாத் தொகுதியில் உள்ள முஸ்லிம் ,தமிழ் மக்களுக்கு மிக நீண்டநாள் பிரச்சினையாக இருந்து வருகின்ற சுத்தமான குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க முயற்சிப்பதுடன் மாவட்டத்தில் எல்லை ரீதியாகவுள்ள பிரச்சினைகளுக்கு உரிய அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி எல்லை ரீதியான பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவரலாம் என்று நம்பிக்கையுளளது.

கடந்த காலங்களில் இந்தப் பிரச்சினைகளுக்கு தன்னாலான முயற்சிகளை மேற்கொண்ட போது சில தடங்கல்கள் ஏற்பட்டதன் காரணமாக எனது முயற்சிகள் தீர்வு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் மாவட்டத்தில் உள்ள தமிழ் கட்சிகளை பிரதிநிதித்தவப்படுத்தும் தமிழ் அரசியல் தலைவர்களுடன் பேசி அவர்களது இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள உள்ளேன்.

இந்த அரசாங்கம் ஒரு நல்லாட்சியினை மையப்படுத்தி முன்னெடுக்கும் அரசாங்கமாக இருப்பதனால் தானும் தனது மாவட்டத்திலும் குறிப்பாக தனது பிரதேசத்திலும் அரசியலில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்புவதோடு மாவட்டத்தில் இடம்பெறுகின்ற அபிவிருத்திகள், உரிமை சாரந்த விடயங்களை மேற்கொள்கின்ற போது அப்பிரதேசத்தில் இருக்கின்ற தழிழ் அரசியல் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளோடு கலந்தாலோசித்து செயற்படவுள்ளேன்.

தமிழர்கள், முஸ்லிம்கள் என்று பிரிந்து செயற்படும் அரசியல்கலாசாரத்தை தான் வெறுப்பதாகவும் தனது எதிர்கால அரசியல் வாழ்க்கை சமூக ஒற்றுமையை ஏற்படுத்தும் அரசியல் கலாசாரமாக மட்டக்களப்பு மாவட்டத்தை மாற்றுவதற்கு முயற்சிக்கவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வாகனங்கள் குறித்து வீரதுங்கவின் விளக்கம்

புறக்கோட்டை வாகனத் தரிப்பிடம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட வாகனங்கள் உரிய வழிமுறைகளின் பின்னர் சேவையில் இருந்து நீக்கப்பட்டவை என முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வாகன தரிப்பிடத்தில் இருந்து, ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமானவை எனக் கூறப்படும் புல்லட் புரூப் சொகுசு கார்கள் உட்பட 53 வாகனங்களை கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸார் கைப்பற்றினர்.

அந்தப் பகுதியில் இருந்த வாகனங்கள் அதி உயர் பாதுகாப்புடையவை என்பதால் சந்தைகளில் விற்கவோ அல்லது ஏலத்தில் விடவோ அனுமதிக்கப்படவில்லை என லலித் வீரதுங்க சுட்டிக்காட்டினார்.

குறித்த வாகனங்களை நிறுத்தி வைப்பதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக ஒப்பந்த அடிப்படையில் அவற்றை குறித்த இடத்தில் நிறுத்தி வைத்திருந்ததாகவும், அந்த அனைத்து வாகனங்களிலும் பதிவுகள் இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எது எவ்வாறு இருப்பினும் ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான மேலும் சில வாகனங்கள் காணாமற் போயுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறித்து வினவியது.

ஒருவருக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் அவரது பதவிக்காலம் முடிவடைந்ததும் மீளளிக்கப்பட வேண்டும் எனக் கூறிய அவர், அவ்வாறு வழங்கப்படவில்லையாயின் ஜனாதிபதி செயலகத்தில் உள்ள பதிவுகளின் படி மீள வாகனங்களை ஒப்படைக்காதவர்களிடம் தெரியப்படுத்தி அவற்றை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவித்தார். (இ-5)

# துக்கத்தை சொல்ல ஜே.வி.பி.கட்சியால் அவசர தொலைபேசி இலக்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துக்கங்களை முன்வைக்க மக்கள் விடுதலை முன்னணி குழுவொன்றை நியமித்துள்ளது.

அக்கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ நேற்று ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு இதனை தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் அசாதாரணமாக அல்லது பழிவாங்கப்பட்டவர்கள் இக்குழு மூலம் தகவல் வழங்க முடியும்.

011 289 6394/071 810 6863 என்ற இலக்கங்களில் யார் வேண்டுமானாலும் தகவல் வழங்க முடியும்.

அல்லது இல.43/20 நுக காபெதெச, பிலியந்தல வீதி, மஹரகம என்ற விலாசத்திற்கு கடிதம் மூலமும் தகவல் வழங்க முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 18 சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்: BPES, MPES/ விரிவுரையாளர்<br>தொ.இ: B/4036 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 32 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: சித்தவைத்தியர்<br>தொ.இ: G/4069 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 26 செவ் 8 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில் (லண்டன்)<br>தொ.இ: B/4038 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 35 3/4 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/4070 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 30 3/4 உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: உதவிப் பொறியியலாளர்<br>தொ.இ: B/4039 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 49 3/4 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4073 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம் கி.பா: 41 1/2<br>தகைமை/தொழில்: HOTEI MANAGEMENT/ தனியார் தொழில் (லண்டன் NOT PR)<br>தொ.இ: B/4041 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 49 1/4 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/4078 |


கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி பிரதேச சபையின் வேலைகளுக்காக 39 மில்.நிதி

வடமராட்சி பிரதேச சபையில் சபை வேலைகளுக்காக 2015 ஆம் ஆண்டுக்கு 39.133 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் பொ.வியாகேசு தெரிவித்தார். தலைமை அலுவலக மேல்மாடித்திருத்தம், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் உபகரணங்கள் ஏனைய அலுவலக பொருட்கள் கொள்வனவு, உடுப்பிட்டி உப அலுவலக வாகன தரிப்பிட திருத்தம், வாகனக்கொள்வனவும் அமைப்பு செலவும் போன்ற செயற்பாடுகளுக்காக 3.393 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகள், வாகன கொள்வனவு, ஆயுர்வேத வைத்தியசாலை குழாய் திருத்தம் போன்ற செயற்பாடுகளுக்கு 7.4 மில்லியன் ரூபாவும், வாகன உபகரணங்கள், வீதி அமைத்தல் சபை, உள்ளூர் கடன் கட்டணம் போன்ற செயற்பாடுகளுக்காக 20.440 மில்லியன் ரூபாய் நிதியும் நீர்விநியோகத் திட்டத்திற்காக 2 இலட்சம் ரூபாய் நிதியும் அத்துடன் 4 சந்தைகளின் திருத்த வேலைகளுக்காக 5.900 மில்லியன் ரூபாவும் பொது நூலக புத்தகம், தளபாட கொள்வனவு, சனசமூக திருத்தம் அவற்றின் தளபாடம் உபகரணம் கொள்வனவு, மயானங்களுக்கான திருத்தம் போன்ற வேலைத்திட்டங்களுக்கு 1.8 மில்லியன் ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான வேலைகள் மிகவிரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-5)




# அனலைதீவு பிரதேச வைத்தியசாலைக்கு 6 மில்.பெறுமதியான அம்புலன்ஸ் படகு

## சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**அனலைதீவு பிரதேச வைத்தியசாலைக்கு 6 மில்லியன் ரூபா செலவில் புதிய அம்புலன்ஸ் படகு வழங்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

அனலைதீவு பிரதேச வைத்திய சாலையின் வெளிநோயாளர் கட்டடத்திறப்பு விழா அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனலைதீவு பிரதேச வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கான கட்டடம் அனலைதீவு புலம் பெயர் மக்களினால் சுமார் 2 கோடி ரூபா செலவில் கட்டப்பட்டு சுகாதார திணைக்களத்திட்டம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலைக்கான மருத்துவ உபகரணங்கள் இவ்வருடத்திற்குள் முழுமையாக வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வருட இறுதிக்குள் வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத் திட்டத்தில் வடமாகாண சுகாதார அமைச்சின் பாதீட்டில் 6 மில்லியன் ரூபா செலவில் அம்புலன்ஸ் படகும் வழங்கப்படவுள்ளது.

இதேபோல் மருத்துவர் விடுதி, மகப்பேற்று விடுதி, ஆண்கள், பெண்கள் விடுதி என்பனவும் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை அனலைதீவு பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியராக வைத்தியர் அற்புதராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவ் வருடம் நயினாதீவிற்கான நிரந்தர பல் வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த வருடம் அனலைதீவிற்கான பல் வைத்தியரும் நியமிக்கப்படவுள்ளார்.

மேலும் அனலைதீவு பிரதேச வைத்தியசாலையின் விஸ்தரிப்பிற்கு வைத்தியசாலைக்குப் பின்புற மாகவுள்ள காணியும் கொள்வனவு செய்யப்படவுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (இ-4)

## சமூக சேவைத் திணைக்களம் மேலும் இருவருக்கு நிதியுதவி

(கரணவாய்)

சமூக சேவைத்திணைக்களம் யுனிசெப்பின் உதவியுடன் மாதாந்த சிகிச்சைக்குச் செல்லும் மேலும் இரண்டு பயனாளிகளுக்கு போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்கியுள்ளது.

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த வே.பிரேமதாஸ், ந.ஏழுமலை ஆகியோருக்கே இந் நிதியுதவி வழங்கப்படவுள்ளதுடன் அவர்களைத் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ். சிவசிறி கேட்டுள்ளார்.

இதேவேளை இதுவரை 11 பேருக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-60)


யாழ்.செய்திகள்

# சாவகச்சேரி நூலகத்தில் இணையவசதி ஆரம்பிப்பு



(சாவகச்சேரி)

பொதுமக்களின் பாவனைக்கென சாவகச்சேரி பொது நூலகத்தில் புலம்பெயர் உறவுகளது நிதியுதவியினால் இணைய வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்தியர் அருளானந்தம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இணைய வசதியை ஆரம்பித்து வைத்தார்.

தென்மராட்சி கல்வயல் பண்டிதர் வேலுப்பிள்ளை நினைவாக அவரது மகன் வைத்திய கலாநிதி சிவகடாட்சம் 2 இலட்சம் ரூபா செலவில் இரண்டு கணனிகள், அதற்குரிய மேசை மற்றும் இணையவசதி என்பவற்றைச் செய்து கொடுத்துள்ளார்.

இந்நிகழ்வில் அதிபர் அருந்தவபாலன், ஏற்பாட்டாளர் ரட்ணம் இரவீந்திரன், மன்ற உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என். நவரட்ணம் மேலும் இணைய வசதிகளைச் செய்து கொடுக்க முன்வந்துள்ளதாக தவிசாளர் இ. தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (இ-2)

# அனலைதீவு மக்களின் வாழ்வாதார பிரச்சினைக்கு தீர்வுகாண கோரிக்கை

## முதலமைச்சரிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு மக்கள் நிரந்தர நீர்வசதி, இறங்குதுறை போன்ற வசதிகளை அமைத்துத் தருமாறு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கைகள் அடங்கிய மகஜரினை அனலைதீவுப் பிரதேச வைத்தியசாலையின் கனடா அபிவிருத்திக்குழுப் பணிப்பாளரும் மகப்பேற்று வைத்திய நிபுணருமான வைத்தியர் கிருபானந்தம் முதலமைச்சரிடம் கையளித்துள்ளார்.

அனலைதீவு, குடாநாட்டிலிருந்து தனித்துள்ள தீவாகக் காணப்படுவதனாலும் கடலால் சூழப்பட்டுள்ளதனாலும் குடிநீர் என்பது மிகவும் தட்டுப்பாடானதொன்றாகவே காணப்படுகின்றது.

அனலைதீவினைப் பொறுத்தவரையில் ஏனைய போக்குவரத்துகளைப் பார்க்கிலும் நாளாந்த கடற்பயணமே அதிகளவில் காணப்படுகின்றது.

நாளொன்றிற்கு 4 படகுச் சேவைகளே இடம்பெற்று வருகின்ற நிலையில் அதனை அதிகரிப்பதோடு இறங்குதுறையினையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இங்கு மூன்று அரச பாடசாலைகள் காணப்படுகின்ற போதிலும் அங்கு கற்பிக்கின்ற ஆசிரியர் எண்ணிக்கை பற்றாக்குறையானதொன்றாகவே காணப்படுகின்றது.

குறிப்பாக உயர்தர வகுப்புகளுக்கான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதோடு அதிலும் குறிப்பாக உயர் தரப்பிரிவில் உயிரியல் பாடத்திற்கான ஆசிரியர் பற்றாக்குறை அதிகளவில் காணப்படுகின்றது.

இதனால் அங்குள்ள மாணவர்கள் கல்வியில் உச்ச நிலையில் மிளிர முடியாத நிலை காணப்படுவதோடு பின்தங்கும் நிலையும் ஏற்படுகிறது.

அங்குள்ள அனைத்து வீதிகளும் மிக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டு காணப்படுகின்றது. இதனைப் புனரமைக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் வடக்கு முதல்வரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகளுள் அனலைதீவில் காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினையினை வடக்கு மாகாண கல்வியமைச்சரிடம் பேசி எதிர்வரும் 3 மாதங்களுக்குள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் பா.கஜதீபன் உறுதியளித்துள்ளார். (இ-4)

# பாதையோரங்களில் காணப்படும் பாதுகாப்பற்ற கிணறுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மறவன்புலோ பகுதியில் பாதுகாப்பற்ற பல கிணறுகள் வீதி ஓரங்களிலும் வயல்களிலும் காணப்படுகின்றன.

குறிப்பாக சகலகலாவல்லி வித்தியாலயம் செல்லும் பாதையில் சில கிணறுகள் இருக்கின்றன. பாடசாலைக்கு முன்பள்ளி மாணவர் தொடக்கம் உயர்வகுப்பு மாணவர் வரை இப் பாதையால் செல்ல வேண்டியுள்ளது.

இக் கிணறுகள் பாதுகாப்பு அற்றவை என்பதால் அன்றாடம் கூலி வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை காலையும் மாலையும் கூட்டிச் சென்று திரும்பவும் அழைத்துவர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

சிலவேளைகளில் பிள்ளைகள் நேரத் தாமதித்தால் பெற்றோர் பெரும் கவலையடையும் நிலையும் ஏற்படுகிறது.

எனவே இதனைக் கவனத்தில் கொண்டு உடனடியாக இக்கிணறுகளைப் பாதுகாப்பான முறையில் மாற்றி அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை கைதடி, நாவற்குழிப் பகுதிகளிலும் இவ்வாறான அபாயநிலையில் கிணறுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோத்தாவின் பெயரிலிருந்த வங்கிக்கணக்கு அரசியலமைப்புக்கு முரணானது - மாயதுன்ன



நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் தனது பெயரில் வங்கி கணக்கொன்றில் அரசாங்கத்திற்கு கிடைத்த பணத்தை அதில் வைப்புச் செய்திருந்தால், அது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணான செயல் என முன்னாள் அரச கணக்காய்வாளர் எஸ்.சீ.மாயதுன்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் வைத்திருந்த வங்கிக் கணக்கு சட்டவிரோதமானது எனவும் அது அரச பொது நிதியத்திற்கு சேர வேண்டியது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த வங்கிக் கணக்கு அமைச்சரவையின் அனுமதியுடன் தொடங்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் கோத்தபாயவின் பெயரில் இருந்த வங்கிக்கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 8 பில்லியன் பணத்தை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அரச பொது நிதிய கணக்கிற்கு மாற்றம் செய்துள்ளார்.

அரசியலமைப்பின் 149 (1) இன் அடிப்படையில் நிதியமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக முன்னாள் கணக்காய்வாளர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பேசும் படம் - 08




பொம்மை பூனை கையில் பொம்மை மவுஸ். உண்மை பூனை கையில் பிளாஸ்ரிக் மவுஸ்.

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

அனுப்பியவர்:
கோபிகிருஸ்ணா
உரும்பிராய்.

## அத்தியாவசியப் பொருட்களின் விலையும் குறைகிறது

(கொழும்பு)

இன்னும் சில நாட்களில் அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலை குறைக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

மாலைதீவின் நிதி அமைச்சர் அப்துல் ஜஹாட்டுடனான சந்திப்பின் பின்னர் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, அரச ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து இதன்போது ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர். மேலும் 12 இலட்சத்து 25 ஆயிரம் பேர் வரையிலான ஊழியர்கள் சம்பள அதிகரிப்பிற்காக காத்திருப்பதாகக் குறிப்பிட்ட அவர் அவர்களது சம்பளத்தை 5 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-5)

# பணம் வசூலிக்கும் அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## கல்வி அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

**பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு பிள்ளைகளை சேர்க்கும் போது பல்வேறு காரணங்களைக் கூறிப் பணம் வசூலிக்கும் அதிபர்களுக்கு எதிராக தண்டனை விதிக்கப்படும் எனவும் தரம் ஒன்றுக்கு பிள்ளைகளை சேர்க்கும் போது பெற்றோர்களிடம் பணம் வசூலிக்கும் அதிபர்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.**

கட்டட நிர்மாணம், நிறப்பூச்சு பூசவென்று பணம் வசூலிக்கும் அதிபர்களுக்கும் தண்டனை விதிக்கப்படும். இந்த முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து சம்பந்தப்பட்ட அதிபர்களுக்கு எதிராக தண்டனை விதிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுமதிக்கும் போது பணம் வசூலிக்க வேண்டாம் என அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் அறிவித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் கட்டடங்களை நிர்மாணிக்கவும், நிறப்பூச்சுக்களை பூசுவதற்காகவும் என தெரிவித்து பணம் வசூலிக்கும் நடவடிக்கையை முற்றாக நிறுத்துமாறு கல்வி அமைச்சர், அதிபர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாணவர்களுக்கான வசதிக் கட்டணங்களை அறவிடுவதற்கான அனுமதி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.



பெற்றோர்களிடம் அநீதியான முறையில் பணம் வசூலிக்கும் அதிபர்கள் குறித்து மாகாண சபைகளிடமோ அல்லது கல்வி அமைச்சின் 1988 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ தகவல் வழங்க முடியுமென மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ரூபவாஹினியிலிருந்து விரட்டப்பட்ட சோதிடர்கள்

தேசிய ரூபவாஹினி தொலைக்காட்சியில் சோதிடர்கள் குறித்து எவ்வித நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்ப வேண்டாம் என்று அதன் தலைவர் சோமரத்ன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவரினால் கோட்டே காவல்துறை விடுதியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

## தைப்பூச உற்சவம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 03 ஆம் திகதி மயிலிட்டி கண்ணகாதேவி அம்மன் ஆலயத்திலும் மயிலிட்டி முருகன் ஆலயத்திலும் மேற்படி தைப்பூச உற்சவம் மிகச்சிறப்பாக நடத்துவதற்கு பாதுகாப்பு படையினர் அனுமதி தந்துள்ளார்கள்.

சகல அடியவர்களும் மயிலிட்டிக்கு சென்று உற்சவத்தில் கலந்து கொள்ளுவதற்கு சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (இ-5)

## கே.பிக்கு எதிரான விசாரணைகளை புதிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது

ஊழல், மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கே.பிக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மோசடி செய்த எவரேனும் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றிருப்பார்களாயின், இனியும் செல்வார்களாயின் அவர்களைக் கைது செய்வது ஒன்றும் கடினமான விடயமல்ல.

சர்வதேச பொலிஸாருக்கு அறிவித்த பின்னர், அவர்கள், அத்தகைய மோசடிக்காரர்களை கைது செய்து நாட்டுக்கு அனுப்பி வைப்பார்கள்.



விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேச வலையமைப்பின் பொறுப்பாளராக இருந்த கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கே.பிக்கு எதிராக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவர் பல கடவுச்சீட்டுகளை வைத்திருந்தார் என்றும், பத்துக்கு மேற்பட்ட பெயர்களில் நடமாடியுள்ளார் என்றும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## வாகனங்களை ஒப்படைக்கவில்லை சனத் ஜெயசூரிய மீது முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் பிரதித்தபால் அமைச்சர் சனத் ஜெயசூரிய இன்னமும் வாகனங்களை மீள ஒப்படைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பிரதி அமைச்சர் பதவியை வகித்த காலத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாகனங்களே இவ்வாறு மீள ஒப்படைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பிரதி அமைச்சராக சனத் ஜெயசூரிய பதவி வகித்த காலத்தில் அரசாங்கத்தினால் ஏழு வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

அவற்றில் மூன்று வாகனங்கள் மட்டுமே மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் நான்கு வாகனங்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்படவில்லை.

பி.எம்.டபிள்யூ வாகனமொன்று, லேண்ட் லோவர் டிஸ்கவரி ஜீப் ஒன்று, நிசான் சொல்பி ரக இரண்டு மோட்டார் கார்கள் ஆகியன இவ்வாறு ஒப்படைக்கப்படவில்லை.

முஸ்லிம் விவகார மற்றும் தபால் அமைச்சர் எம். எச். அப்துல் ஹாலீம் இந்த தகவலை உறுதி செய்துள்ளார். (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒபாமாவை ஆச்சரியத்தில் ஆழ்த்திய மோடி

# மரபை மீறி விமான நிலையத்தில் வரவேற்பு!

## நெருக்கமடையும் அமெ.-இந்திய உறவு







**அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா டில்லி ராஜ் காட்டில் மகாத்மாகாந்தி நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.**

வெளிநாட்டு தலைவர்கள் இந்தியா வரும் போது விமான நிலையத்தில் அவர்களை நாட்டின் பிரதமரோ, ஜனாதிபதியோ வரவேற்கும் மரபு கிடையாது. வழியனுப்பும் போது மட்டும் விமான நிலையம் சென்று வழியனுப்புவார்கள்.

மத்திய அமைச்சர் ஒருவர்தான் தலைவர்களை வரவேற்க விமான நிலையம் சென்று காத்திருப்பார். அதேபோல் ஒபாமாவை வரவேற்கும் வரவேற்புக் குழு தலைவராக மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் நியமிக்கப்பட்டு இருந்தார். அவர் ஒபாமாவை வரவேற்க பாலம் விமான நிலையம் சென்று வரவேற்பறையில் காத்து இருந்தார்.

ஆனால் திடீர் என்று பிரதமர் நரேந்திர மோடி பாலம் விமான நிலையத்துக்கு சென்றார். ஒபாமா விமானம் தரை இறங்கியதும் மோடி அந்த விமானத்தின் அருகே சென்று நின்று கொண்டார். அங்கிருந்த அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேசிக் கொண்டு இருந்தார்.

ஒபாமா விமான படிக்கட்டுகளில் இருந்து மனைவியுடன் கைகோர்த்த படி இறங்கி வந்தார். அவர் தன்னை வரவேற்க மோடி வந்திருப்பதை கவனிக்கவில்லை. முதலில் அங்கிருந்த இராணுவ அதிகாரி பக்கம் ஒபாமா சென்றார். அவர் ஒபாமாவை கைகுலுக்கி வரவேற்றார். அவருக்கு அருகில் பிரதமர் மோடி நின்றிருப்பதைப் பார்த்து ஒபாமா ஆச்சரியம் அடைந்தார்.

உடனே மோடி முன்னால் சென்று ஒபாமாவை கை குலுக்கி வரவேற்றார். இருவரும் கட்டித்தழுவிக் கொண்டனர். ஒருவர் முதுகில் ஒருவர் தட்டிக் கொடுத்தனர். தன்னை மோடி விமான நிலையத்துக்கு வந்து வரவேற்றது ஒபாமாவை நெகிழ வைத்து விட்டது.

பின்னர் மனைவி மிச்சேலை மோடிக்கு ஒபாமா அறிமுகப்படுத்தினார். அதன்பிறகு மிச்சேலை மோடி கை குலுக்கி வரவேற்றார். 3 பேரும் சேர்ந்து நின்றபடி போட்டோவுக்கு போஸ் கொடுத்தனர். ஒரு நிமிடம் சிரித்துக் கொண்டே மோடியும், ஒபாமாவும் பேசியபடி இருந்தனர்.

தொடர்ந்து பிரதமர் மோடி விமான நிலையம் வந்திருந்த மத்திய அமைச்சர்களை ஒபாமாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதன் பிறகு ஒபாமாவை அவரது காருக்கு அழைத்துச் சென்றார்.

ஒபாமா காரில் ஏறி அமர்ந்து மோடியிடம் விடை பெற்றார். கார் அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் வரை மோடி அவரது காரின் அருகில் நின்று கொண்டு இருந்தார். கார் சென்ற பிறகே மோடி விமான நிலையத்தில இருந்து புறப்பட்டார்.

டில்லியில் அதிகாலையில் பனி மூட்டம் இருக்கும் என்பதால் பனி விலகிய பின்பு 10 மணிக்கு ஒபாமா விமானம் வரும் வகையில் பயண நேரம் அமைக்கப்பட்டு இருந்தது.

மேலும் முன்னெச்சரிக்கையாக ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரிலும் ஒபாமா விமானம் தரை இறங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. ஆனால் ஒபாமா விமானம் காலை 9.40 மணிக்கு டில்லியிலேயே தரை இறங்கியது.

வழக்கமாக வெளி நாட்டு தலைவர்களை வரவேற்கும் போது பிரதமர் கோட்சூட் அணிவது வழக்கம். ஆனால் மோடி எளிமையான முறையில் மஞ்சள் நிறத்தில் பைஜாமாவும் குர்தாவும் அணிந்து தோளில் சிவப்பு சால்வை அணிந்து இருந்தார்.

அவரது எளிமையைப் பார்த்து ஒபாமா வியந்தார். சாதாரண முறையில் இருவரும் நலம் விசாரித்துக் கொண்டனர்.

இதற்குமுன் 2010 ஆம் ஆண்டு ஒபாமா இந்தியா வந்த போது அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கும் விமான நிலையம் சென்று வரவேற்றார்.

இப்போது 2ஆவதாக மோடியும் ஒபாமாவை விமான நிலையத்தில் வரவேற்றது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவணைப்பணம் செலுத்தாமையால் 21 பேருந்துகள் பறிபோய்விட்டன

## பேருந்து உரிமையாளர்கள் கவலை

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள தனியார் துறையில் பேருந்து சேவையில் ஈடுபடும் 39 பேருந்து உரிமையாளர்களின் 21 பேருந்துகளை வங்கிகளில் பெற்ற குத்தகைப்பணம் (லீசிங்) உரிய தவணைகளில் செலுத்த முடியாது போனமையால் குத்தகைப்பணம் வழங்கிய வங்கிகள் பேருந்துகளை பறித்துச் சென்றுள்ளமையால் தாம் பல இலட்சம் ரூபா பணத்தை இழந்துள்ளதுடன் வாழ்வாதாரத்தையும் இழந்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில், அப்பகுதியில் பேருந்து சேவையில் ஈடுபட்டதாகவும் பின்னர் இறுதி யுத்தத்தின் போது பேருந்துகளையும் சிற்றூர்திகளையும் வட்டுவாகல் கடற்கரையில் கைவிட்டு விட்டு, இராணுவத்தினரிடம் சரணடைந்து நலன்புரி முகாம்களில் தங்கி வாழ்ந்ததாகத் தெரிவிக்கின்றனர்.

பின்னர் மீள்குடியேற்றத்தின் போது தம்மால் கைவிடப்பட்டு சென்ற பேருந்துகளை பார்வையிட்டபோது அவை எரிக்கப்பட்ட நிலையிலும் முற்றாக சேதமடைந்த நிலையிலும் இருந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து அரச மற்றும் தனியார் வங்கிகளில் குத்தகை அடிப்படையில் பேருந்துகளை பெற்று சேவையில் ஈடுபட்டபோது எரிபொருட்களின் விலை அதிகரிப்பினாலும் பிரதேச மக்களின் விவசாய நடவடிக்கைகள் அழிவடைந்தமையாலும் பொது மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றமை குறைந்தமையாலும் அரச போக்குவரத்திற்கு பேருந்துகள் அதிகளவு ஈடுபட்டமையாலும் எம்மால் குத்தகைப்பணம் செலுத்த முடியாமல் போனது. இதனால் வங்கிகள் பேருந்துகளை பறித்துச் சென்றுள்ளன.

எனவே சம்பந்தப்பட்ட துறையினர் எமக்கான இழப்பீடுகளை வழங்கி வாழ்வாதாரத்திற்கு வழிசமைத்துத் தரவேண்டுமென பாதிக்கப்பட்ட தனியார் பேருந்துகளின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-2-15)





**மன்/கௌரியம்பாள் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் (திருக்கேதீஸ்வரம்) தரம் ஒன்று மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்ற போது...**

# கமக்கார அமைப்புக்கள் நிர்வாக தெரிவை மேற்கொள்ள வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களத்தின்எல்லைக்குட்பட்ட கமநலசேவை நிலையங்களின் கீழுள்ள கிராமமட்ட கமக்கார அமைப்புக்கள் பலவற்றின் நிர்வாகத் தெரிவுகள் நீண்ட காலமாக இடம்பெறாமையால் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது,

மேற்படி கமக்கார அமைப்புக்களுக்கு கமநலசேவை நிலையங்கள் ஊடாகவும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் அன்பளிப்பாக வழங்கப்பட்ட விவசாய உபகரணங்கள் மீள்பரிசீலனைக்குட்படுத்தப்படாமையால் அவை மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் பயன்படுத்த முடியாத நிலையில் செயலிழந்து காணப்படுவதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.கமக்கார அமைப்புக்களுக்கு விவசாய நடவடிக்கைக்கென அன்பளிப்பாக வழங்கப்பட்ட இரு சக்கர உழவு இயந்திரங்கள், தெளிகருவிகள் என்பன விவசாயத்திற்கு பயன்படுத்தாத நிலையில் செயலிழந்துள்ளன.

இந்நிலையில் விவசாயிகள் தனியாரிடம் வாடகைக்கு பெரும் தொகைப் பணம்செலுத்திமேற்படிஉபகரணங்கள் பெற்று அவற்றை விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டம் இருபோக விவசாயச் செய்கையை மேற்கொள்ளும் பகுதிகளை உள்ளடக்கிய மாவட்டமாகக் காணப்படுகின்றமையால் கமக்கார அமைப்புக்களின் செயற்பாடுகள் மிகவும் வினைத்திறன் உள்ளதாக காணப்பட வேண்டுமென விவசாயிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கமக்கார அமைப்புக்களின் நிர்வாகத் தெரிவு இரு வருடங்களுக்கு ஒரு முறையேனும் இடம்பெற வேண்டும் என்பது நியதியாகும்.ஆனால் பல கிராமங்களில் அவ்வாறு நடைபெறாமல் ஆரம்பத்தில் தெரிவான நிர்வாகத்துடனேயே தொடர்ந்தும் செயற்படுவதாலேயே விவசாய உபகரணங்கள் பயன்பாடின்றிக் கிடக்கின்றன.

முறைக்கு முறை நிர்வாகத் தெரிவு சீராக இடம்பெற்றதால் விவசாய உபகரணங்கள் உரியமுறையில் பாதுகாக்கப்படுமெனவும் பாதிக்கப்பட்ட விவசாயிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே கமக்கார அமைப்புக்கள் நிர்வாகத் தெரிவை மேற் கொண்டு விவசாய நடவடிக்கைக்கு உதவ முன்வரவேண்டுமென பாதிக் கப்பட்ட விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-2-263)

# மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுங்கள்

(முக்கொம்பன்)

பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முக்கொம்பன், சின்னப் பல்லவராயன் கட்டு, 65 வீட்டுத்திட்டம், 150 வீட்டுத்திட்டம், நேரடம்பன், 10 வீட்டுத்திட்டம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் மீள்குடியேறி பல வருடங்கள் கடந்த நிலையிலும் மின்சாரம் வழங்குவதற்கான மின்மாற்றி திறப்பு விழா செய்யப்பட்டு மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமங்களில் வசிக்கும் மக்கள் தமது வீட்டிற்கான வயறிங் வேலைகள் பூர்த்தியாக்கி விட்டு மின்சாரம் பெறுவதற்கான படிவங்கள் பூர்த்தியாக்கி கிளிநொச்சி மின்சார சபை அலுவலகத்தில் ஒப்படைத்து விட்டு மின்சாரத்தை பெறுவதற்கு காத்திருக்கின்றனர். இதேவேளை தமது வாழ்வாதார முன்னேற்றத்திற்கென மேற்கொள்ளப்படவிருந்த தொழில்களும் மின்சாரம் இன்மையால் முடங்கிய நிலையிலுள்ளதாக அக்குடும்பங்கள் தெரி விக்கின்றன. இது தொடர்பில் கிளிநொச்சி மின்சார சபை அதிகாரிகள் கவனமெடுத்து மிக விரைவில் மின்சாரத்தை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-283)




# பூர்வீக நிலங்களை மீட்டுத்தாருங்கள்

## கேப்பாப்பிலவு மக்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

கேப்பாபிலவு மத்தி, சூரிபுரம் நிலக்குடியிருப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களை அவர்களது பூர்வீக நிலங்களில் மீளக் குடியமர ஆவன செய்யுமாறு கோரி, கேப்பிலவு கிராம முன்னேற்ற சங்கத்தலைவர் இ.பரமேஸ்வரன் வட மாகாண சபை உறுப்பினர் திருமதி மேரி கமலா குணசீலனிடம் 128 பேரின் கையெழுத்துடன மகஜர் ஒன்றை கையளித்துள்ளார்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கேப்பாபிலவு மக்களாகிய நாங்கள் தங்களுக்கு தெரியப்படுத்துவது யாதெனில், தாங்கள் காலாகாலமாக வாழ்ந்து வந்த கேப்பாபிலவு மத்தி, சூரிபுரம் நிலக்குடியிருப்பு ஆகிய பகுதிகள் முன்னைய் அரசாங்கத்தால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கென சுவீகரிக்கப்பட்டு நாங்கள் மீளக்குடியேறிய வேளை மாதிரிக் கிராமமாக வேறு ஓர் இடத்தில்குடியமர்த்தப்பட்டோம்.

கடந்த 20 ஆம் திகதி கிராம முன்னேற்ற சங்கத்தை ஒன்று கூட்டி எமது பூர்வீக நிலங்களுக்கு செல்வதாக மக்களாக தீமானித்துள்ளோம்.

இதனை தங்களுக்கு தெரியப்படுத்தி உரிய தீர்வினை எதிர்பார்த்து தங்களிடம் இந்த மகஜரை கையளிக்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பெற்றுக்கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் திருமதி மேரிகமலா குணசீலன் தான் உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்தி தங்களுக்கு தீர்வைப் பெற்று தருவதாக கூறியுள்ளார்.

அத்தோடு இந்த கிராமத்திற்கு வருகை தரவுள்ள மீள்குடியேற்ற அமைச்சருக்கும் இந்த மகஜரை சமர்ப்பிக்க உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

1050

## கந்தர்வனின் சாபம்



...அதற்குள் காட்டில் ஒரு சூறாவளிக் காற்று வீச, சாண் உயரமேயான யசோதரனைக் காற்று மேலே தூக்கிச்சென்றது. பயந்து நடுங்கிப்போன் அவன், அந்த சமயம் வானில் பறந்து கொண்டிருந்த ஒரு கிளியின் வாலினைப் பிடித்துக் கொண்டான். அந்தக் கிளி அண்டை ராஜ்யமான அனந்தபுரியின் இளவரசி ராகலதாவின் வளர்ப்புக்கிளி.

தன் தோழிகளுடன் அந்தப்புரத்தில் பந்து விளையாடிக் கொண டிருந்த ராகலதா தன் வளர்ப்புக்கிளி யின் வாலைப படித்துத் தொங்கிக் கொண்டு வந்த உருவததைப்பார்த்து வியப்பு அடைந்தாள்.

சாண் உயரமேயான உருவம், தலையில் சுண்டைக்காய் போல் ஒரு கிரீடம், கடுகுகள் போன்ற விழிகளைக்கொண்ட அந்த விசி த்திரமான மனித உருவ த்தை அவள் அதுவரை பார்த்ததேயில்லை.

அதைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டேயி ருந்தாள். அதற்குள் அவளது தோழிகள், “ஆகா! இது என்ன அதசயம்?” என்று கூச்சலிட, ராகலதா யசோதர னைத் தன் கையில் எடுத்துக்கொண்டாள்.

அந்த உருவம் அசைவதைக் கண்டு இளவரசி, “ஆகா! இது உயிருள்ள பொம்மை போலிருக்கிறது” என்றாள்.

மிக அருகில் ராகலதாவைப் பார்த்த யசோதரன் அவளுடைய அழகில் மதிமயங்கிப் போனான். மணந்தால் அவளையே மணப்பது என்று தீர்மானித் தான்.

“ராஜகுமாரி! நான் நிஷாதபுரி மன்னன்! நான் எப்படி இத்தகைய உருவத்தைப் பெற்றேன் என்று எனக்கே தெரியவில்லை. நான் வீராதி வீரன்தான்! என்றாவது ஒரு நாள் நான் சுய உருவம் பெறுவேன்” என்றான் யசோதரன்.

இளவரசி அவனைத்தன்னுடன் அந்தப் புரத்தில் வைத்துக்கொள்ளத் தீர்மானித்தாள்.

தினமும் அவனுடன் இரகசியமாகப் பொழுது போக்கினாள். ராகலதா நன்றாக ஓவியம் வரையக் கூடியவள்! யசோதரன் எல்லாரையுமபோல் சராசரி உயரத்தில் இருந்தால் எப்படியிருப் பான் என்று கற்பனை செய்து, அவனுடைய ஓவியத்தைத் தீட்டினாள். ஓவியத்தை அவள் பூர்த்தி செய்தபோது, பின்னாலிருந்து அதை கவனித்த யசோதரன், “ராகலதா!

நீ ஓவியத்தில் வரைந்துள்ளதைபோல் ஒரு நாள் கட்டாயம் மாறுவேன. அன்று என் மனதைத் திறந்து சொல்வதாக இருந்தேன்.

ஆனால, இப் போதே அதைச் சொல்கிறேன். நான் உன்னிடம் அன்பு கொண்டுள்ளேன். சுயவுருவம் பெற்ற பின் உன்னையே மணப்பேன்” என்றான். ராகலதா அதைக் கேட்டு நாணத்துடன் முகத்தை மூடிக்கொணடாள்.



**(முற்றும்)**

### நோய் எதிர்ப்பு முறையின் தந்தை எட்வர்ட் ஜென்னர்



எட்வர்ட் ஆண்டனி ஜென்னர் இங்கி லாந்திலுள்ள பெர்க்லி என்ற நகரில் 1749ஆம் ஆண்டு மே 17ஆம் திகதி பிறநதார். இவர் இங்கிலாந்து நாட்டு மருத்து வரும் அறிவிய லாளரும் ஆவார். பெரியம்மை நோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடித்ததற்காக ஜென்னர் அறியப்படு கிறார். இவர் நோய் எதிர்ப்பு முறையின் (நிர்ப்பீடனம்) தந்தை என சிறப்பு பெற்றார். இவருடைய கண்டு பிடிப்பு பிற கண்டு பிடிப்புகளைக் காட்டிலும் மனித உயிர்களை கொடிய நோயிலிருந்து காப்பாற்ற உதவியது.

ஏழாண்டுகள் அறுவைச் சிகிச்சைப் பயிற்சியின் பின் ஒரு சிறந்த அறுவை சிகிச்சை நிபுனராகத் தேர்ந்தார். அந்த சமயத்தில் பண்ணை மக்களி டையே நிலவிய ஒரு நம்பிக்கை ஜென்னருக்கு அம்மை நோய்க்கு மருந்து கண்டறிய வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தது. **“கௌபாக்சு”** எனப்படும் பசுக்களின் மடிக்காம்புகளை புண்ணாக்கும் ஒரு நோய ஒரு மனிதனுக்கு ஒரு தடவை ஏற்பட்டு விட்டால் அதே மனிதனுக்கு பெரியம்மை நோய வராது என்பதுதான் அந்த நம்பிக்கை.

எனவே பெரியம்மை நோய் வராமல் தடுக்க “கௌபாக்சு“ நோயை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் நம்பினர். அதற்காக சுமார் இருபது ஆண்டுகள் விடாமல் பல்வேறு ஆராய்ச்சிகளை செய்தார்.

1796-ஆம் ஆண்டு மே 14-ஆம் நாள் தனது தோட்டக் காரரின் மக னான ஜேம்ஸ் பிப்ஸ் என்ற எட்டு வயது சிறுவனுக்கு அம்மைக்கான தடுப்பூசி போட எத்தனித்தார் ஜென்னர். சாரான நில்மெசு என்ற பண்ணைப் பெண்ணின் கையிலிருந்த கௌபாக்சு கொப்புளத்திலிருந்து எடுத்த பாலை ஊசி மூலம் ஜேம்ஸ் பிப்ஸின் உடலுக்குள் செலுத்தினார். எதிர்பார்த்தது போலவே அச்சிறுவனுக்கு கௌபாக்சு நோய் ஏற்பட்டது. ஆனால விரைவில் குணமடைந்தான்.

சில வாரங்கள் கழித்து பெரியம்மை கிருமியான அம்மைப் பாலை ஊசி மூலம் அதே சிறுவனுக்கு செலுத்தினார். ஆனால் ஜென்னர் சற்றும் மனம் தளராமல் அந்த தடுப்பூசியை சிறுவனுக்குக் குத்தினார். கிராம வாசிகள் எண்ணியதைப் போலவே, ஜென்னர் ஆராய்ச்சி செய்து உறுதிப் படுத்தியது போலவே அந்த சிறுவனுக்கு பெரியம்மை நோய் ஏற்படவில்லை. சிறுவனை இரகசியமான முறையில் பெற்றோரின் அனுமதியின்றி, சிறுவனுக்கு தெரியப்படுத்தாமல் இப்பரிசோதனையை அவர் மேற்கொண்டமையை தற்போது மருத்துவ ஒழுக்கவியல் தவறான அணுகு முறை என சுட்டிக்காட்டுகிறது. ஆயினும், அம்மைக்கான தடுப்பூசி கிடைத்துவிட்டது என்பதை உறுதி செய்தமைக்கும், ஜேம்ஸ் பிப்ஸ் என்ற அந்த சிறுவனுக்கும் மருத்துவ வரலாற்றில் அழியா இடம் கிடைத்தது.

அவரின் கண்டுபிடிப்புக்கும் சேவைக்குமாக பிரித்தானிய அரசின் பரிசில்களையும் விருதுகளையும் பெற்றார். இயற்கையை அளவில்லாமல் நேசித்த ஜென்னர் தனது கண்டு பிடிப்புக்கு காப்புரிமை பெற நினைக் காமல் அதனை உலகுக்கு இலவசமாக வழங்கினார். ஏழை எளியவர் களுக்கு இலவசமாக அம்மைக் குத்தினார். ஒவ்வொரு நாளும் அவரின் மருத்துவ அறைக்கு முன் முன்னூறு ஏழை மக்கள் வரை வரிசை பிடித்து நின்று அம்மைக்கான தடுப்பூசியை போட்டுக்கொண்டனர். 1823ஆம் ஆண்டு பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட இவர் ஜனவரி 26ஆம் திகதி தனது 73ஆவது அகவையில் காலமானார்.

## 01.2015 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1340 - இங்கிலாந்து மன்னன் மூன்றாம் எட்வர்ட் பிரான்சின் மன்னனாக அறிவிக்கப்பட்டான்.
- 1500 - விசெண்ட் யானெஸ் பின்சோன் பிரேஷில் நாட்டில் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்ர்.
- 1565 - கர்நாடக மாநிலத்தின் தலைக்கோட்டை என்ற இடத்தில் விஜயநகரப் பேரரசுக்கும் இஸ்லாமிய தக்காணத்து சுல்தான்களுக்குமிடையில் இடம்பெற்ற சமரில் கடைசி இந்துப் பேரரசு தோல்வி கண்டது. இத்தோல்வி இந்தியாவின் பெரும் பகுதி இஸ்லாமியரின் கட்டுப்பாட்டுக்குள் வரக் காரணி யாய் இருந்தது.
- 1788 - ஆர்தர் பிலிப் தலைமையில் பிரித்தானியக் கைதி களின் முதலாவது தொகுதியைக் கொண்ட கப்பல் சிட்னியை அடைந்து புதிய குடியேற்றத்தை ஆரம் பித்தனர். இது ஆஸ்திரேலிய நாளாகக் கொண் டாடப்படுகிறது.
- 1837 - மிச்சிகன் ஐக்கிய அமெரிக்காவின் 26வது மாநில மாக இணைக்கப்பட்டது.
- 1841 - ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கை அதிகாரபூர்வ மாக ஆக்கிரமித்தது.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: லூசியானா மாநிலம் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து விலகியது.
- 1870 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியா அமெரிக்கக் கூட்டணியில் மீண்டும் இணைந்தது.
- 1924 - சென் பீட்டர்ஸ்பேர்க், லெனின்கிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1926 - ஜோன் லோகி பெயர்ட், தொலைக்காட்சிப் பெட்டி யைக் காட்சிப்படுத்தினார்.
- 1930 - இந்திய தேசியக் காங்கிரஸ் 26 ஜனவரியை இந்தியாவின் விடுதலை நாளாக அறிவித்தது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் படையினர் முதற்தடவையாக ஐரோப்பாவை அடைந்தனர்.
- 1949 - ஆஸ்திரேலியக் குடியுரிமை முதன் முறையாக வழங்கப்பட்டது.
- 1950 - இந்தியா குடியரசு நாடானது. ராஜேந்திர பிரசாத் அதன் முதலாவது குடியரசுத் தலைவரானார்.
- 1952 - பிரித்தானிய மற்றும் எகிப்திய உயர் வகுப்பு வர்த் தகர்களுக்கெதிராக எகிப்தில் இடம்பெற்ற வன் முறைகளில் கெய்ரோ நகரத்தின் நடுப்பகுதி தீயினால் சேதமாக்கப்பட்டது.
- 1962 - ரேஞ்சர் 3 விண்கலம் சந்திரனை ஆராய்வதற்காக விண்ணுக்கு ஏவப்பட்டது. ஆனாலும் இத் தளவுளவி 22,000 மைல்களால் சந்திரனைத் தவறவிட்டது.
- 1965 - இந்தி இந்தியாவின் அதிகாரபூர்வ மொழியானது.
- 2006 - வெஸ்டர்ன் யூனியன் நிறுவனம் தொலைத்தந்தி மூலமான தனது சேவைகளை நிறுத்திக் கொண்டது.

**பிறப்புகள**

- 1904 - சோன் மக்பிறைட், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1988)
- 1911 - பொலிக்காப் கூஷ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1993)

**இறப்புகள்**

- **1823 - எட்வர்ட் ஜென்னர், ஆங்கிலேய மருத்துவர், அம்மை நோய்க்கு தடுப்பு மருந்து கண்டு பிடித்தவர்.** (பி. 1749)
- 1895 - கெய்லி, கணிதவியலர் (பி. 1821)
- 1964 - தோமஸ் அடிகள், யாழ்ப்பாணம் தோலகட்டி ஆசிரம சுவாமிகள் (பி. 1886)

**சிறப்பு நாள்**

உலக சுங்கத்துறை தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு...

இசை: எம்.எஸ்.விஸ்வநாதன். பாடல்கள்: கண்ணதாசன், கண் மணிசுப்பு.

படத்தின் பெரும்பகுதி சிங் கப்பூரில் படமாக்கப்பட்டது.

கதை இதுதான்-

இசைக்குழு ஒன்றை நடத்து பவர், கமல். அதில் கிட்டார் வாசிப் பவர் ரஜினி. இருவரும் நெருங் கிய நண்பர்கள்.

### மர்ம மங்கை

இந்த இசைக்குழுவினர், 10 நாட்கள் இசை நிகழ்ச்சி நடத்த சிங்கப்பூருக்கு செல்கிறார்கள். போகும்போது ஒரு மர்ம மங் கையை (ஜெயப்பிரதா) சந்திக்கி றார், கமல்.

அந்த மர்ம மங்கை, இரண்டு விதமான தோற்றங்களில் வந்து கமலை குழப்புவார். கேட்டால், "நான் அவள் இல்லை" என்பார். சமயத்துக்கு தக்கபடி அவர் பொய் பேசுவதாக கமல் நினைப்பார்.

ஆனாலும் அவரை காதலிப் பார்.

இடையிடையே ஜெயப்பிர தாவை ஒரு "பயங்கர மனிதன்" துரத்துவது போன்ற தோற்றம் வந்து போகும். பல திருப்பங்க ளுக்குப்பின், உண்மை வெளிப் படும்.

ஜெயப்பிரதாவுக்கு ரத்தப்புற்று நோய்.

சில நாட்களில் இறந்துவிடக் கூடிய நிலையில் இருப்பவர்.

கடைசி காலத்தை சந்தோஷ மாகக் கழிக்க விரும்புவதாகக் கூறி, கமலின் இசைக்குழுவில் சேருகிறார்.

பல ஊர்களுக்குச் சென்று இசை நிகழ்ச்சி நடத்தும்போது, ஒருமுறை ரத்தவாந்தி எடுப்பார்.

அவரை பரிசோதிக்கும் டாக் டர்கள், உங்கள் ஆயுள் இன்னும் மூன்று நாட்கள் என்று கூறுவார் கள்.

இதை அறியும் கமல், தன் தாயார் முன்னிலையில் ஜெயப் பிரதாவை மணந்து கொள்வார். இருவரும் சந்தோஷமாக வாழ் வார்கள்.

பிறகு, ஜெயப்பிரதாவை துரத்திக் கொண்டிருந்த பயங்கர மனிதனி டம் (மரணம்) அவர் சிக்கிவிடு வார்.

### ரஜினி காமெடி

இந்தப் படத் தில் ரஜினியின் பங்களிப்பு கணி சமானது.

ஓட்டல்களிலும், பக்கத்தில் இருப்பவர்களிடமும் சின்னச்சின்ன பொருள்களை (கண்ணாடி, ஸ்பூன், மதுபாட்டில் போன்றவற்றை) திருடு வது அவர் காரக்டர். நிறைய தமாஷ் செய்வார்.

ஒருநாள், அவருக்கு ஒரு ஆடி யோ டேப் வரும்.

அதில், அன்பரே! உங்களைக் கண்டதும் காதல் கொண்டேன். என்னை சந்திக்க வருகிறீர்களா? என்று ஒரு பெண் பேசுவாள். முகவரியை, தெளிவில்லாமல் பதிவு செய்திருப்பாள்.

ரஜினி, அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க டேப் ரிக்கார்டருடன் சிங்கப்பூர் முழுவதும் அலைவார்.

கடைசியில் அந்தப் பெண்ணைக் கண்டுபிடிப்பார்.

அவள் ஒரு "லூஸ்" என்று அறி ந்து அதிர்ச்சி அடைவார்.

சிகரெட்டை தூக்கிப்போட்டு உதட்டில் பிடிக்கும் ரஜினி ஸ்டைல் ரொம்பப் பிரபலமானது, இந்தப் படத்தில்தான்.

அவர் ஸ்டைலைப் பார்த்த பூர்ணம் விஸ்வநாதன், தொடர்ந்து இப்படி 10 முறை சிகரெட்டைத் தூக்கிப்போட்டு பிடிக்க முடியுமா? அதில் நீ ஜெயித்தால், ஒரு காரை பரிசளிக்கிறேன் என்று சவால் விடுவார். ரஜினி அந்த சவாலை ஏற்றுக் கொள்வார்.

"பந்தயத்தில் வெற்றி பெற்றால் உனக்கு கார். தோற்றுவிட்டால், நீ உன்னுடைய சுண்டு விரலை வெட்டிக் கொடுத்து விடவேண்டும்! என்று பூர்ணம் விஸ்வநாதன் பயமுறுத்துவார்.

வந்தால் ஒரு கார்! போனால் ஒரு விரல்தானே! என்று நண் பர்கள் உற்சாகப்படுத்தியதால், சிக ரெட்டை தூக்கிப்போட்டுப் பிடிக்க ஆரம்பிப்பார், ரஜினி.

9 முறை வெற்றிகரமாக இப்படி செய்து விடுவார். பிறகு, அவரு டைய சுண்டு விரல் அவரை பய முறுத்தும்.

சார்! உங்களுக்கு கார் முக் கியம். எனக்கு விரல் முக்கியம். யாருக்கும் வெற்றி தோல்வி இல் லாமல் போட்டியை இதோடு முடி த்துக் கொள்வோமே! என்று கூறி விடுவார்!

அதாவது, தமாஷ் வேடம் என்ப தால் காட்சி இப்படி முடிந்தது! இன்று இந்த மாதிரி காட்சி அமைக் கப்பட்டால், ரஜினி 10 தடவை என்ன, 100 தடவை கூட சிக ரெட்டை தூக்கிப்போட்டு பிடித்து விடமாட்டாரா! "மன்மதன் வந் தானா, நம்ம சங்கதி சொன் னானா?", "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "சயோனரா", "இனிமை நிறைந்த உலகம் இருக்கு", "பாரதி கண்ணம்மா" உள்பட எல்லாப் பாடல்களும் ஹிட்.

ரஜினிக்காக, எம்.எஸ்.வி. பாடிய "சம்போ... சிவசம்போ...!" பாடல் வெகு பிரபலம். பாலசந்த ரின் நுட்பமான டைரக்ஷன், கமல - ரஜினி ஆகியோரின் நடிப்பு, இனிமையான பாடல்கள், கண் ணுக்கு குளிர்ச்சியான சிங்கப்பூர் காட்சிகள் ஆகியவற்றால், படம் நூறு நாட்களுக்கு மேல் ஓடியது.

37



கமல் -ரஜினி படம் நினைத்தாலே இனிக்கும்.

## சூரியனை மறைத்த கிரகணம் நீங்கியது!

(தொடரும்)

# கருவாச்சி காவியம்





## வைரமுத்து- 59

...தலையிலயிருந்து ஆரம்பிச்சு கடைசியாப் பாத சேவைக்கு வந்து சேந்துட்டா.

தூசு தும்பு பூச்சியெல்லாம் எடுக் கிறதுக்குத் தாய்க்கோழி குஞ்சுக் கோழிய மூக்கால கொத்தும் பாருங்க.

அப்படிக் கருவாச்சி பாதத்த நகத் தால பட்டும் படமக் கொத்திக் கொத்தி விடுறா பெரியமூக்கி.

ஒடம்புல அலுப்ப எடுத்து எறிஞ் சிட்டு மூளைக்குள்ள அடைப்பு எடு க்குது அந்த நகக் கொத்து.

எல்லாம் முடிச்சு அணில் முதுகுல ராமர் மூணு கோடு போட்ட மாதிரி பாதத்துல நகத்தால மூணுகோடு போட்டுட்டா முடிஞ்சது சோலின்னு அர்த்தம்.

எப்பிடிப்பட்ட ஆளாயிருந்தாலும் அதுக்குள்ள கொறட்ட விட்டாகணும்.

ஆத்தா இத்தன பண்ணியும் ஒறக் கம் வரல கருவாச்சிக்கு அன்னைக்கு.

இவ ஆத்தாளா? அழுக்குச் சீல கட்டி வந்த கடவுளா என்னியவிட்டா யாருமில்ல இவளுக்கு எம் முந்தா னைய விட நீளமில்ல இவ ஒலகம்.

நான் ஒறங்கிட்டதா நெனச்சுக்கிட்டு என் இடுப்ப இறுக்கி புடிக்குதுன்னு தளர்த்தி விடுறாளே இந்தச் சீல.. இதச் செவக்கிக் கட்டச் சொல்லிக் குடுத் தது கூட இவதானே!

பாவடையில உருவாஞ்சுருக்குப் போடத் தெரியாமக் கல்லு முடிச்சுப் போட்டு அலைஞ்ச கேணச்சிறுக்கி நானு.



இவதான் சொல்லிக்குடுத்தா சீல உடுத்த. பதினாறு மொழப் பொட வையில ஒரு முந்தியெடுத்து இடுப்புல ஒரு சுத்துச் சுத்தி இடப்பக்கம் ஒரு சொருகு, வலப்பக்கம் ஒரு சொருகுச் சொருகி முடிஞ்சுகிட்டு, சின்னச் சின்னதா ஏழெட்டு விசிறி மடிப்பு மடிச்சு, சுங்கம் சேத்து அதைப் பின் பக்கம் தள்ளிக் கொசுவம் விட்டு நெஞ்சோட சேத்துத் தச்சது மாதிரி ஒரு இறுக்கு இறுக்கி, முந்தானைய இடுப்புல சேத்து ஆப்படிச்சது மாதிரி சொருகி விட்டுட்டுச் சொல்றா; பிரிட்டிஷ்காரன் பீரங்கியில சுட்டாக் கட்டுன கோட்டை விழுந்தாலும் விழுந்திரும் கட்டுன சேல விழுந்தி ராது பாத்துக்க.

கருவாச்சி மூஞ்சில விழுந்து ஒர சுது ஆத்தா முந்தான.

இந்த முந்தானையப் பத்தி அவ சொன்ன சொல்லு இன்னும் காது லயே இருக்கு. பதினாறு மொழத்துல மிச்சம் விட்ருக்கேனே இந்த ரெண் டரை மொழம் முந்தான. இதுல இரு க்குடி ஆத்தா ஒரு பொம்பள பொழப்பு.

முந்தானைக்கு வேல ஒண்ணா ரெண்டா. படுக்க- ஒக்கார முக்காடு போட- தலையில முண்டு கட்ட- தலை தொவட்ட- சும்மாடு சுத்த காசு முடிய- விசிறி வீச கட்டுக் கட்ட- ஞாபக முடிபோட- பண்டமாத்திரம் சுத்தம் பண்ண- மூஞ்சி தொடைக்க- ஒலை எறக்க- அவசரத்துல புருசனுக்குப் பாய் விரிக்க.. எல்லாத்துக்கும் அந்த முந்தானதான்.

அஞ்சரை அடிப் பொம்பள பொழ ப்பு இருக்கு அந்த ரெண்டரை மொழ த்துல. ஆனா அவ சொன்னதெல்லாம் போக சொல்லாத ஒரு வேலையும் செஞ்சது அவ முந்தான.

அப்ப... பத்துப் பதினொரு வயசிருக்கும் கருவாச்சிக்கு.

ஆத்தாளு மகளுமாக் கரட்டுக் காட் டுல கூலிக்குக் களையெடுத்தாக; கண்ணுல சிக்குன காஞ்ச வெறகெல் லாம் ஒண்ணு சேத்துத் தலயில கட்டிச் சொமந்தாக பொழுதிருக்க வந்திட்டி ருக்கா புடிச்சிருச்சு மழை.

பக்கத்துலயே ஒருக்களிச்சுப் படு த்துகிட்டா ஆத்தா.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் சிறப்பு விருந்தினராக ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், அதிபர் ஆ.சூசைநாதர், வடமராட்சி வலய முறைசாராக் கல்வி செயற்றிட்ட உத்தியோகத்தர் ச.சிவானந்தன் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆர்.அபராஜிதன் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் கலை நிகழ்வினையும் மற்றும் பொங்கல் நிகழ்வையும் படங்களில் காணலாம்.



அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலைய பொன்விழாவில் கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் எஸ்.வியாகேசு, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி. ஜே.பரமோதயன் ஆகியோர் உரையாற்றுவதையும் திருமதி ஜெயபாரதி கௌசிகனின் கர்நாடக இசைக்கச்சேரியையும் படங்களில் காணலாம். (படங்கள்:-தும்பளை செய்தியாளர்)



கச்சாய் வினோபா பாலர் பகல் பராமரிப்பு இல்ல ,சமூகப் பணித் தொடரில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கச்சாய் அ.த.க. பாடசாலையின் நான்கு மாணவர்களுக்கு கச்சாய் பூசகர் அமரர் திருநாவுக்கரசு, பாலாவி அமரர் இராசையா குடும்பத்தினரின் ஞாபகார்த்தமாக துவிச்சக்கர வண்டிகள் மற்றும் நிதி அன்பளிப்புகள் என்பன பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கப்பட்ட போது...



கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் தரம் I வகுப்புக்கான கால்கோள் விழா அண்மையில் அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் பாடசாலையில் அமைந்துள்ள சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில் நடைபெற்ற போது...



யாழ். எழுவைதீவு முருக வேள் வித்தியாலயத்தில் 2015 ஆம் ஆண்டிற்கான மாணவர் தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது...

(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

நிழல்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊழல் குற்றவாளிகளுக்கு தேர்தலில் போட்டியிடத் தடை

(கொழும்பு)

**ஊழல் மோசடிக் குற்றச் சாட்டுக்கள் இருந்தால் தேர்தலில் பேட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. குறிப்பிட்ட ஒரு நபருக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டு இருந்தால் அவர்களை தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்போவதில்லைஎனதெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதற்கு பதிலீடாக படித்த, மதிநுட்பமானவர்களை தேர்தலில் களமிறக்குவது என பிரதான கட்சிகள் தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் காலங்களில் ஊழல் மோசடிகளில் ஈடுபட முடியாத வகையில் சட்ட திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.

தற்போது ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட அரசியல்வாதிகளுக்கு எதிராக விசாரணை நடத்தி உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிரதேச சபை உறுப்பினர்கள் முதல் அமைச்சரவை அமைச்சர்கள் வரையில் சகல அரசியல்வாதிகளுக்கும் ஒழுக்கக் கோவையொன்று உருவாக்கப்பட உள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒரு மாதகால விளம்பரச் செலவு 88 இலட்சம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த ஒரு மாதகாலப் பகுதியில் விளம்பரம் மற்றும் பிரசார நடவடிக்கைகளுக்காக 88 இலட்சம் ரூபாயை செலவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதியிலிருந்து ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த ஒரு மாதகால எல்லைக்குள்ளேயே இப் பெருந்தொகை பணத்தினை பெற்க்கூட்டுத்தாபனம் விளம்பரத்திற்காக செலவிட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இந்த விளம்பர செலவினங்களுக்குள் ஜனாதிபதித் தேர்தலுக்கான விளம்பரம் மற்றும் பிரசார செலவுகளும் அடங்குவதாகவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.(இ-5)

## பௌத்த தீவிரவாதமே மகிந்தவின் தோல்விக்கு காரணம்

### நியோமல் பெரேரா தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு பௌத்த தீவிரவாதமே காரணம் என்று முன்னாள் வெளியுறவுத்துறை பிரதியமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ, மூன்றாம் முறையாகவும் தெரிவு செய்யப்பட்டால் பொதுபல சேனா மற்றும் ஏனைய பௌத்த தீவிரவாத அமைப்புக்களால் தமக்கு பாதிப்பு ஏற்படும் என்று சிறுபான்மையினர் பீதிகொண்டிருந்ததாகவும் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போருக்கு பின்னர் அமைதியான வாழ்க்கையையே அனைவரும் எதிர்பார்த்தனர்.


எனினும் சிறுபான்மையினர் மத்தியில் தொடர்ந்தும் பீதி நிலை உருவாக்கப்பட்டு வந்தது என்று பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 550 | 700 | 600 |
| தக்காளி | 200 | 250 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 160 | 120 | 140 |
| கரட் | 200 | 150 | 200 |
| பூசணி | 70 | 80 | 100 |
| புடோல் | 80 | 140 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 40-90 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 70 |
| பாகற்காய் | 140 | 140 | 200 |
| வெண்டிக்காய் | 110 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 160 | 200 | 200 |
| லீக்ஸ் | — | 240 | 300 |
| பீற்றூட் | — | 200 | 200 |
| கறிமிளகாய் | — | 350 | 280 |
| முருங்கைக்காய் | — | 800 | — |
| போஞ்சி | 240 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 140 | 140 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 40 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 60 | 35-45 |
| இராசவள்ளி | 100 | 140 | 100 |




இரத்தினசபாபதி பாலராஜா




மாலினி மகேந்திரன்




மோகன் மோகனரூபன்




சுரேக்கா மோகன்




கோகுலன் கோகுல்




சுவஸ்தி சுவஸ்திகா




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அறியப்படாத அந்த தேவதை" ஜனாதிபதியாயிற்று!



**சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு என்.சத்தியமூர்த்தி எழுதிய அறியப்படாத அந்த தேவதையே ஜனாதிபதியாயிற்று என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் பிரசுரிக்கப்படுகிறது.**

தற்போது "முன்னாள் ஜனாதிபதி" ஆகிவிட்ட மகிந்த ராஜபக்ச, நாட்டின் வடக்கே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தனது தேர்தல் 2 பிரசாரக்கூட்டத்தில் சிறுபான்மைத் தமிழர்களது வாக்குகளைக் கோரி, போரினால் பாதிக்கப்பட்ட அந்த மக்களிடம் அவர் விடுத்த அறைகூவலின் போது "அறியப்படாத தேவதையிலும் பார்க்க அறியப்பட்ட சாத்தானை"யே நம்புமாறு கோரியிருந்தார் (இது, "அறியப்படாத சாத்தானிலும் பார்க்க அறியப்பட்ட சாத்தனே மேல்" என்று பொருள்படும் Known Devil is better Than an unknown Devil என்ற ஆங்கில வார்த்தைப் பிரயோகத்தின் 'மகிந்த தழுவல்' ஆகும்). இதற்கு முன்னர் அவருக்கு நெருக்கமான உதவியாளராக இருந்தவரும், ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளராயிருந்து தற்போது புதிய ஜனாதிபதியாகியிருப்பவருமான மைத்திரிபால சிறிசேனாவையே, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தனது தேர்தல் பிரசாரக்கூட்ட அறைகூவலில் "அறியப்பாததேவதை" என அவர் மறைமுகமாக குறிப்பிட்டிருந்தது வெளியரங்கமான ஒன்றேதான். இருந்தும், தமிழ் மக்களுடன் சேர்ந்து முஸ்லிம் சிறுபான்மையினருமாக சிறிசேன அவர்களுக்கே வெற்றிகரமான அந்த அதிகப்படியான தமது வாக்குகளை அள்ளிக் குவித்திருந்தனர். நாட்டின் சிங்கள-பௌத்தர்களையே பெரும்பான்மையாகக் கொண்ட எஞ்சிய ஏனைய வாக்காளர்களும் அவ்விதமே செயற்பட்டிருந்த போதிலுங்கூட, அறியப்படாத அந்த தேவதையே நாட்டின் ஜனாதிபதியாவதை வெற்றிகரமாகச் சாதித்துக் கொள்வதற்கான அவர்களது எழுச்சி பெரிதும் குறைவுபட்டதாகவே இருந்தது. சிறுபான்மையினர்களது எழுச்சியே அதனை வெற்றிகரமாய் சாதித்திருந்தது.

நாட்டில் பிடிவாதமான முறையில் நீடித்துச்செல்லும் உயர்தலைமைத் தகைமையை மாற்றுவதற்கான புதிய தலைமுறையினரது தேவைகளை நிறைவேற்றுவதற்கான தேர்தலாகவே இந்தத் தடவை அது அமைந்தது எனலாம். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் தெற்காசியாவிலேயே யதார்த்தமாகிவிட்டிருக்கும் இந்தப் புதிய பாணியேதான் ராஜபக்சவையும் முன்னர் பதவிக்குக்கொண்டு வந்திருந்தது.

சமூக ஊடக தகவல் ஆய்வுகளின் படி பார்த்தால், அயலிலுள்ள இந்தியாவிற் போலவே நாட்டின் ஒட்டுமொத்த வாக்காளர்களிலும்10%மான வாக்குகளே இந்த அதிகார மாற்றத்தினை சாத்தியமாக்கியிருந்தது. பெறுபேறுகளை நுணுக்கமாய் ஆராய்ந்தால் இது புலப்படும். இருப்பினும், அரசாங்க தரப்பிலிருந்து கட்சி தாவி வருவர் என எதிர்பார்க்கப்பட்டிருந்தும் தாமதித்தே ஒருவர் பின் ஒருவராக வந்து இணைந்து கொண்ட 'ஜாதிக ஹெல உறுமய' (JHU), 'சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்' (SLMC) மற்றும் 'அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்' (ACMC) போன்ற கட்சிகளுக்குப் புறம்பாக தனது 'UNP' மற்றும் 'DP' (ஜனநாயக கட்சி) கூட்டாளிகளிலேயே கூடுதலாக தங்கியிருந்தவரான சிறிசேனாவின் வெற்றிக்கு உண்மையில் சிறுபான்மை யினரது மிகப் பாரிய பங்களிப்பே காரணமாயிருந்ததென்பதை எவரும் மறுக்க முடியாது.

கடந்த தசாப்தத்திற்கு மேற்பட்ட காலமாக ராஜபக்சவின் தலைமைத்துவத்தின் அதிகாரத்துவமிக்க செயற்பாடுகளால் அடுத்தடுத்து தோல்விகளையே சந்தித்து உளவுரம் பாதிப்படைந்திருந்த எதிர்க்கட்சிக்கு மேற்படி விடயங்கள் உளவுரத்தினை மேலும் அதிகரிப்பதாக இருந்ததென்றால், தமிழர் கூட்டமைப்பிற்குள்ளாக (TNA) தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றிருந்த நெருக்கடியையும் மீறி தமிழ் மக்களே, வாக்களித்தே ராஜபக்சவை வெளியேற்றும்படி 'TNA' தீர்க்கமான முறையில் மேற்கொண்ட பிரகடனமே முக்கியமான வேறுபாட்டினைத் தோற்றுவித்திருந்ததென இறுதித்தேர்தல் கணக்கெடுப்பு காட்டுகிறது. இவ்விதமாக, தற்போதைய எதிரணியிருக்கும் 'UNP' தலைவர் ரணில் அவர்களை அப்போது பிரதமராக இருந்த ராஜபக்சவிடம், விடுதலைப்புலிகளின் தேர்தல் பகிஷ்கரிப்பு அழைப்பின் மூலம் தோல்வியுறச் செய்த குற்றம் எதிரணியின் முன் இப்போது கழுவப்பட்டதாயிற்று.

ரணில் தோல்வியடைந்த அத்தேர்தலின் போது அதனை பகிஷ்கரிக்கும்படி விடுதலைப்புலிகள் விடுத்த ஆணை மற்றும் அது கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப் பட்டதும் இடம்பெற்றிருக்காவிடின் ரணில் வெற்றிபெற அது உதவியிருக்கக் கூடுமா என்பது தொடர்ந்தும் நீண்ட காலத்திற்கு விவாதத்திற்குரியதாகவே இருக்கும். அப்போது அத்தேர்தல் நிலைப்பாடுகள் வேறுபட்டதாயிருந்ததுடன் போருக்குப் பிந்திய 2010 ஆம் ஆண்டு தேர்தல் காலகட்ட நிலைப்பாடுகள் முன்னையதிலும் பார்க்க கூடுதல் வித்தியாசமானவையாகவேதானிருந்திருக்கின்றன. பின்னையதில் TNA யுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமேதான் அப்போதைய பொதுவேட்பாளரான சரத் பொன்சேகா தரப்பினர் தோல்வியை ஒப்புக்கொள்ளுமுன்னரே கூடுதலான சிங்கள- பௌத்த வாக்குகளை இழக்கச் செய்ததாக நம்பப்படுகிறது

### போர்க்காலமும் சமாதான காலமும்

போர்க்கால ஜனாதிபதிக்கு பதிலாக சமாதானகால ஜனாதிபதியொருவரின் வருகையை எதிர்பார்த்திருந்த மக்களும் நாடும் பொருத்தமான ஒருவரை நீண்டகாலம் தேடி இறுதியில் அவரைக் கண்டுபிடித்துள்ளார்கள் என்பதையே இதுவரை நிகழ்ந்த அனைத்து விடயங்களும் இன்று நிரூபித்திருக்கின்றன. எப்படியும் தேர்தலுக்கான அந்த திகதி அறிவிக்கப்பட்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்ற உறுதிப்பாடு வரும்வரையில் ஜனாதிபதி ராஜபக்சவுடன் கட்சி உதவியாளராகவும் அவரது அமைச்சு ஸ்தானத்தில் இருந்தவரு மான மைத்திரிபால சிறிசேனாவேதான் அவருக்கு எதிரான போட்டியாளர் என்பதை, அதுபற்றிய உண்மை தெரிந்தவர்கள் சிலரைத் தவிர வேறு எவருமே அறிந்திருக்கவில்லை.



தமிழர் செறிந்து வாழும் செல்வாக்கான பிரதேசங்களில் ஜனாதிபதி ராஜபக்சவுக்கெதிராக பெருவாரியான எண்ணிக்கைகளில் வாக்குகள் பதிவாகிய அதே நேரம், ராஜபக்சவுக்கான உயர்வாக்குப் பலம் கொண்ட சிங்களப்பெரும்பான்மை பிரதேசங்களில் இருதரப்புக்கிடையிலான இடைவெளி குறைவாக இருந்த அதே நேரம், சிறிசேனாவுக்கான உயர்வாக்குப் பலம் கொண்ட பகுதிகளில் அவற்றுக்கிடையிலான இடைவெளி கூடுதலாகவே இருந்தது. இத ற்கு நிறைவேற்று அதிகார பதவி எதிர்ப்புக் காரணிகளுடன் கட்சித் தாவல்களுடான இணைப்புகள், குறிப்பாக சிறுபான்மை சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோரிடையிலிருந்து தாமதமாக வந்து இணைந்தோர் ஆகிய இரு காரணிகளே அந்த வித்தியாசத்திற்கு காரணமாயிருந்தன.

இது அடிப்படையற்ற விடயமொன்றல்ல. 1994 இல் சந்திரிகா குமாரதுங்க (CBK) பெற்றிருந்த ஆகக்கூடிய வாக்கு எண்ணிக்கைக்குப்பின்னர், அண்மைக்காலத்தில் 2 ஆவது ஆகக்கூடுதல் வாக்கு எண்ணிக்கையுடன் கூடிய தனது 2 ஆவது பதவிக் காலத்தை ஜனாதிபதி ராஜபக்ச 2005 இல் வெற்றிகொண்டிருந்தார். அதாவது, TNA யும் SLMCயும் அவருக்கொதிராக வாக்களித்த போதும் அந்த வெற்றியை அவர் பெற்றே இருந்தார். இந்தத் தடவை கட்சிகளதும் தனியாட்களதும் எதிர்த் தரப்புத் தாவல்களுக்குப் பின்னரும் ஒருவித சமநிலைக்கு இட்டுச்செல்லக்கூடிய மலைநாட்டுத் தமிழர்களது 'CWC' (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்) கட்சி அவருக்கு கைகொடுக்குமென்றொரு நம்பிக்கை அவருக்கிருந்தது. இருந்தும் அக்கட்சியினது பலம்வாய்ந்த ஆதரவுத் தனமான வாக்குப்பலம் கூடிய நுவரெலியா மாவட்டத்தில் சிறிசேனாவே மாபெரும் வெற்றியீட்டினார்.

இருந்தும் இதிலிருக்கும் ஆர்வத்திற்குரிய மற்றுமோர் விடயம் என்னவென்றால், கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்ததும் முன்னாள் ஜனாதிபதியுமாகிய சந்திரிகா குமாரதுங்கவினது சொந்த தேர்தல் தொகுதியுமான 'அத்தனகல்ல'யில் ஜனாதிபதி ராஜபக்ச உயர் விகிதாசார வாக்குப் பலமொன்றினையே பெற்று முன்னாள் (அதாவது, கிட்டத்தட்ட 4%) அதேவிதம், காலி மாவட்டத்தைச் சேர்ந்ததும் பொன்சேகாவினது தேர்தல் தொகுதியுமான அம்பலாங்கொடயிலும் போதிய வாக்குப்பலம் (10%) பதிவாகியது. நடந்த இவைகளனைத்தையும் பார்க்கும் போது போட்டி நேருக்கு நேர் என்பதிலும் பார்க்க கூடுதல் முக்கியத்துவமானதாயிருப்பதை ஆட்சிக்கு வரும் பொதுக் கூட்டணியும் ஆராயவேண்டும்.

ஜனாதிபதி சிறிசேனாவின் தேர்தல் வெற்றிக்கு, நகர்புற நடுத்தர வாக்காளர்களது நிறைவேற்று அதிகார பதவி எதிர்ப்பு மற்றும் எதேச்சதிகார கொள்கை எதிர்ப்பு போன்ற எதிர்ப்புணர்வுகளுடன் பாரம்பரிய 'UNP'ஆதரவுக்கான கடப்பாட்டுணர்வுகளுடனும் கூடிய வாக்கு வங்கிப் பலமே பிரதான காரணமாய் அமைந்தது என்பது வெளிப்படையானதே. இவ்விதமாக தமக்கான வாக்கு எண்ணிக்கைப் போக்கில் இருவருமே மாறிமாறி ஒருவரை ஒருவர் முந்தி பிந்திச் சென்று இறுதியான ஒரு கட்டத்தில் பெறுபேறுகள் ராஜபக்சவுக்கு பிரகாசமானதாக தோன்றவில்லை. போருக்குப் பிந்திய 'சமூக ஊடக' மற்றும் புதிய பரம்பரை வாக்காளர்களுக்கான சமூகவலைப் போர் யுகமொன்றில் 'நிறைவேற்று அதிகார பதவி எதிர்ப்பு' என்ற முக்கிய விடயமே தேர்தல் காரணியொன்றாக கொழும்பு நகரிலிருந்து ஆரம்பித்து நகரப்புறங்கள், புறநகர்ப் பகுதிகள் மற்றும் கிராமத்து மையப்பகுதிகள் போன்ற அனைத்தையும் தழுவியதாக விரிந்து பரவிச்சென்றதாக தோன்றுகிறது.

### உரசல் புரசல் அற்ற மாற்றம்

தகுதியான 75 வீத வாக்குகள் மூன்றாவது தடவையாக எண்ணப்பட்டு இறுதியான தேர்தல் பெறுபேறுகள் அறிவிக்கப்படுவதற்கு நீண்ட நேரத்திற்கு முன்னரே தேர்தல் தோல்வியை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ராஜபக்சவை பாராட்டத்தான் வேண்டும். நாடு முழுவதும் அடங்கலாக வெளிவந்த அந்த நடுச்சாமச் செய்திகள் உண்மையில் அவருக்கு ஊக்கமளிப்பதாகவே இருக்கவில்லை. தேர்தல் எண்ணப்பட்டுக்கொண்டிருந்த அந்த அதிகாலை விடியலின்போதே அலரி மாளிகையை விட்டு வெளியேறுவது என அதிகாரபூர்வமாக அவர் மேற்கொண்ட தீர்மானத்துடனேயே தேர்தலுக்கு முந்திய அவரது சிந்தனைகள், கற்பனைகள், ஊகங்கள் போன்ற அனைத்து எதிர்கால விடயங்களும் அணைக்கப்பட்ட ஒளி போலாயிற்று. 'UNP' தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு உரையாடலைத் தொடர்ந்தே அவரது அத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது கவனிக்கத்தக்கது- அவதானிக்கவும்பட்டது.


**தமிழில்-யோகர்**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடிக்காரர்கள் கைதாவது உறுதி!

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

**முதலில் பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்கியதன் பின்னர் முன்னைய அரசாங்கத்தின் மோசடிக்காரர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். தெனியாய, பல்லேகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே பிரதமர் ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.**

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர், அத்தியாவசியப் பொருட்கள் மீதான வரிகளை அதிகரித்து கடந்த அரசாங்கம் பொதுமக்கள் மீது பொருளாதாரச் சுமையொன்றை ஏற்றியிருந்தது. ஆனால் அது ஒரு பாரிய தவறான பொருளாதார நடைமுறையாகும்.

அதற்குப் பதிலாக கிராமப்புறங்களின் பொருளாதார பலத்தை அதிகரிக்கும் வகையிலான திட்டங்களின் மூலம் வர்த்தக முயற்சிகளை அதிகரிக்கலாம். இதன் போது அரசாங்கத்துக்கான வரி வருமானம் அதிகரிக்கும். மறுபுறத்தில் நாட்டு மக்களுக்கும் நன்மை கிடைக்கும். இதுதான் இன்றைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையாகவுள்ளது.

தற்போதைய நிலையில் நாட்டு மக்களின் பொருளாதாரம் கடந்த அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கை காரணமாக சீரழிந்துள்ளது. அதனை முதலில் நிவர்த்தி செய்ய வேண்டும்.

தற்போதைக்கு எரிபொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது. இது பொதுமக்களுக்கு நேரடியான நன்மைகளை ஏற்படுத்தியுள்ளது. எதிர்வரும் நாட்களில் மேலும் பல பொருட்கள் மீதான வரிகள் நீக்கப்பட்டு, விலைகள் குறைக்கப்படும். அதன் மூலம் பொதுமக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும்.

அதன் பின்னரே முன்னைய அரசாங்கத்தின் மோசடிக்காரர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ரணில் விக்ரமசிங்க தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வாவுடன் அமெ. அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் முறுகல் நிலையில் இருந்த இலங்கை, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

பிரதமரின் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அமெரிக்கத் தூதரகத்தின் பதில் தூதுவரும், இராஜதந்திர விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியுமான அன்ட்ரூ மான் மற்றும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக பொருளாதார விவகார அதிகாரி கிறிஸ்தோபர் கோர்கியும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை தரப்பில் கொள்கை நடைமுறைப்படுத்தல் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா பங்கேற்றிருந்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது இருதரப்பு மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதுடன், இலங்கையில் அமெரிக்காவின் முதலீட்டை அதிகரிப்பது மற்றும் அமெரிக்காவிடம் இருந்து தொழில்நுட்ப உதவிகளை பெறுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தையான அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகளை அதிகரிப்பது தொடர்பிலும் இந்தப்பேச்சுவார்த்தையின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (இ-5)

# வெலே சுதாவிடமிருந்து மேலும் சில உண்மைத்தகவல்



(கொழும்பு)

பாரிய ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வெலே சுதா என அழைக்கப்படும் வசந்த குமாரவுக்கும் கொழும்பு மாவட்ட இளம் பாராளுமன்ற உறுப்பினருடன் இருந்த உறவு தொடர்பாக மேலும் பல இரகசியங்கள் பொலிஸார் விசாரணையில் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெலே சுதா என அழைக்கப்படும் வசந்த குமாரவினால் பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் ஹெரோயின் போதைப் பொருள் கொழும்பில் இருந்து வெளியேற்றப்படுவது இந்த இளம் பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பிலேயே என தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் பல சந்தர்ப்பங்களில் கொள்ளுப்பிட்டியில் அமைந்திருக்கும் வணிக வளாகம் ஒன்றில் சந்தித்து ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அச்சந்தர்பங்களில் இருவருக்கும் இடையில் பெரிய அளவிலான பணம் கொடுக்கல்-வாங்கல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

வெலே சுதா என அழைக்கப்படும் வசந்த குமாரவிற்கும் முன்னாள் பொலிஸ் அதிகாரிக்கும் இடையில் இருந்த உறவு தொடர்பினால் தற்பொழுது வரை பல உண்மைகள் வெளிவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெலே சுதாவிற்கு கிடைத்த பணத்தில் குறிப்பிடப்பட்ட முன்னாள் பொலிஸ் அதிகாரிக்கு களனி பிரதேசத்தில் நிலம் ஒன்று பணத்திற்கு பெற்றுக்கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது குறித்த பொலிஸ் அதிகாரி நாட்டை விட்டு வெளியேறி உள்ளார். மேலும் அபுதாபியில் அவரால் வெளிநாட்டு பணம் மாற்றப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## பூட்டைத் திறக்க வேண்டும்

ஓர் ஊரிலே ஒரு மன்னர் இருந்தார்.

அந்த நாட்டின் நிர்வாகத்தை கவனிப்பதற்கு ஒரு முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது.

எப்படித் தேர்ந்தெடுக்கிறது?

ஏற்கனவே அமைச்சர்களாகப் பலபேர் அங்கே இருந்தார்கள். அவர்களிலே ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அதனால் மன்னர் அவர்களை அவதானித்தபடியே இருந்தார்.

நான்கு பேருக்கு அந்தத் தகுதி இருப்பதை அவர் கண்டார். அவர்களிலே ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எப்படி என்பது தான் பிரச்சினை.

அவர்கள் நான்கு பேருக்கும் பொதுவான ஒரு போட்டி வைக்க வேண்டும். அதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கு முதலமைச்சர் பதவியைக் கொடுக்கலாம் என்று முடிவு செய்தார். என்ன போட்டி வைக்கிறது? மன்னர் யோசித்தார். அதன் பின் ஒரு முடிவுக்கு வந்தார்.

ஒரு நாள் காலையிலே அந்த நான்கு பேரையும் அழைத்து அவர்களிடம் சொன்னார்:

“இதோ பாருங்கள்... என்னிடம் ஒரு பூட்டு இருக்கிறது. அது சாதாரண பூட்டு அல்ல. எண்கணித முறைப்படி வடிவமைக்கப்பட்ட விஞ்ஞானப் பூட்டு. நாளை காலையிலேயே உங்களிடம் அந்தப் பூட்டைப் கொண்டு வந்து கொடுப்பேன். அதன்பின் ஒவ்வொருக்கும் பூட்டைத் திறப்பதற்கு ஒரு வாய்ப்பு தருவேன்.

யார் அந்தப் பூட்டை குறைவான நேரத்திலே திறக்கிறார்களோ அவர் தான் இந்த நாட்டின் முதலமைச்சர்” என்றார் மன்னர்.

அந்த நான்கு பேரும் நிம்மதி இல்லாமல் இரவு பூராகவும் தூங்கவில்லை.

விடிய விடிய பூட்டு தொடர்பான ஓலைச் சுவடிகள் எல்லாவற்றையும் புரட்டிப் புரட்டி பார்த்தார்கள்.

கணிதம் தொடர்பான குறிப்புக்களையெல்லாம் விழுந்து விழுந்து படித்தார்கள்.

அவசரத்தில் படித்ததால் அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

முதலமைச்சராக வரவேண்டும் என்ற ஆசையிலே அவர்களால் எதையும் நிதானமாக சிந்திக்க முடியவில்லை.

இந்த நான்கு பேரில் ஒருத்தர் மட்டும்அமைதியாக இருந்தார். அவர் மட்டும் தான் கொஞ்சம் நிம்மதியாக தூங்கினார். மறுநாள் விடிந்தது. அரசசபையிலே மன்னர் வந்து அமர்ந்தார்.

இந்த நான்கு பேரும் வந்து சேர்ந்தார்கள்.

ஒரு பெரிய பிரம்மாண்டமான பூட்டை சேவகர்கள் தூக்கிக் கொண்டு வந்தார்கள். அதை மன்னர் முன் வைத்தார்கள்.

ஓ... இவ்வளவு பெரிய பூட்டா? நான்கு பேரும் ஆச்சரியமாக அதைப் பார்த்தார்கள். எல்லோருடைய படபடப்பும் இன்னும் அதிகமாகியது. ஏதோ பரீட்சைக்குப் படிக்கிற மாதிரி கையிலிருந்த ஓலைச்சுவடி களைக் பார்த்தார்கள்.

அதன்பின்பு பூட்டைப் பார்த்தார்கள். ஏதேதோ முயற்சி செய்து பார்த்தார்கள். எதுவும் சரியாகப் புலப்படவில்லை. தோல்வியை ஒப்புக் கொண்டார்கள்.

கடைசியாக இரவு பூராகவும் தூங்கியவர் பூட்டுக்குப் பக்கத்திலே வந்தார். குனிந்து பார்த்தார்.

என்ன ஆச்சரியம்.

ஏற்கனவே, அந்தப் பூட்டு திறந்தேதான் இருக்கிறது. அது பூட்டப்படவேயில்லை. சாவியும் தேவைப்படவில்லை.

கணிதமும் தேவைப்படவில்லை. அவர் சுலபமாக அந்தப் பூட்டைத் திறந்து விட்டார்.

அவர் தான் முதலமைச்சர் என்று மன்னர் அறிவித்தார். இந்தக் கதையிலேயிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன?...

ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால் அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனம் பதற்றம் அடையக்கூடாது. அமைதியாக இருக்க வேண்டும். நிதானமாக இருக்க வேண்டும்.

ஒரு நிர்வாகம் சிறப்பாகச் செயற்பட இந்தப் பண்புகள் முக்கியமாகத் தேவை. நிர்வாகம் என்பது நாட்டு நிர்வாகம் மட்டும் தான் என்பது இல்லை. குடும்ப நிர்வாகமும் அதில் அடங்கும்.

முதலில் என்ன பிரச்சினை என்பதைப் புரிந்து கொண்டு அதன் பின் அதை எப்படித் தீர்க்கலாம் என்று யோசிக்க வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2015 - 12.02.2015



**பணக் கவலை தீரும்! மனக் கவலை கூடும்! எச்சரிக்கையுடன் செயற்பட்டு எதிரிகளை வெல்லும் சிம்ம ராசி அன்பர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன், தனாதிபதி, சகாய ஸ்தானாதிபதி ஆகிய மூன்றும் இணைந்து சஞ்சரிப்பது யோகம் தான்.

பொதுவாக புத- சுக்ர யோகம, புத- ஆதித்ய யோகம் இரண்டும் செயற்படவும், ராசிநாதன் சூரியன் மீது குருவின் பார்வை முழுமையாகப் பதியும் விதத்திலும் இம்மாதக் கிரக நிலைகள் அமைந்துள்ளதால் தொழில் வளர்ச்சியிலிருந்த குறுக்கீடுகள் அகலும். தொல்லை தந்தவர்கள் விலகுவார்கள்.

வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். என்னயிருந்தாலும் 2 இல் ராகுவும், 8 இல் கேதுவும் அல்லவா இருக்கிறார்கள். அஷ்டமத்தில் கேதுவின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பதால் மன நிம்மதி குறைவாகவே இருக்கும். மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை அதிகமாகும். திட்டமிட்ட காரியங்களில் திடீர் திடீரென மாற்றங்கள் ஏற்படும்.

தைரியகாரகன் செவ்வாய் சப்தம பார்வையாக உங்கள் ராசியைப் பார்ப்பதால், தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். தகுந்த நேரத்தில் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

வியாபார விருத்திக்கு வீட்டிலுள்ளவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அதிகார வர்க்கத்தில் உள்ளவர்கள், உங்கள் குறைகள் அகல வழிவகுத்துக் கொடுப்பார்கள்.

கடந்த சில நாட்களாக உங்களுக்கு அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. எனவே, இனம் புரியாத கவலை மேலோங்கும். ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் உருவாகும். வாகனங்களில் செல்லும் பொழுது கூடுதல் கவனம் தேவை. பாகப் பிரிவினைகள் ஏனோ, தானோ என்று முடிவடையுமே தவிர எதிர் பார்த்தபடி முடிவடையாது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனிபகவானை வழிபடுவதோடு, அனுமனையும் வழிபடுவது நல்லது. அனுமனுக்கு வெற்றிலை மாலை அணிவித்தால் வெற்றிகள் உங்களை வந்தடையும்.




# பணக்கவலை தீரும் மனக்கவலை கூடும்

**சுகம் தரும் சுக்ரப்பெயர்ச்சி!**

ஜனவரி 23 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். 3, 10 இற்கு அதிபதி சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளம் சிறப்பாக இருக்கும். கணிசமான லாபம் கிடைக்கும். ஸ்திர சொத்துக்களை வாங்க முன்வருவீர்கள். புதிய கிளைத் தொழில்கள் தொடங்கும் வாய்ப்பு கிடைக்கும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜனவரி 28 ஆம் திகதி தனுசு ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. தனலாபாதிபதி வக்ரம் பெறும் இந்த நேரத்தில், வீண் விரயங்கள் அதிகரிக்கும். வாங்கல்-கொடுக்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் சுபகாரிய நிகழ்வுகளுக்கு உங்களால் முடிந்ததைக் கொடுத்துதவுவீர்கள். பெப்ரவரி 8 ஆம் திகதி மகர புதனின் சஞ்சாரத்தால் உத்தியோக முன்னேற்றம் ஒரு சிலருக்கு ஏற்படும். அரசு வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைக்கும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 10 ஆம் திகதி மீனத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. வாகனங்களை மாற்றிக் கொள்ளலாமா? என்று சிந்திப்பீர்கள். தேக நலனிலும் தொல்லைகள் அதிகரிக்கும். ஒருசிலர் உடன் பிறப்புகளின் பகையை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. நீண்ட தூரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. இம்மாதம் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாக சூரிய வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வரவு திருப்திகரமாக இருக்கும். அஷ்டமத்து கேதுவின் ஆதிக்கத்தால் உடல் நலத்திலும், உடனிருப்பவர்களாலும் தொல்லைகள் ஏற்பட்டு மனக்கவலை உருவாகும். குழந்தைகளை உங்களின் நேரடிப் பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. உங்கள் பெயரில் வாங்கிய சொத்துக்களை விற்க நேரிடுகிறதே என்று கவலைப்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் கனிவு அதிகரிக்க, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தாய்வழி ஆதரவு ஓரளவு கிடைக்கும். மாதக் கடைசியில் விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**சந்தோசங்களை அதிகம் சந்திக்கும் மாதம் இம்மாதம்! வளைந்து கொடுக்கும் தன்மையால் வாழ்க்கையில் முன்னேற்றம் காணும் கன்னி ராசி அன்பர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் ஜென்ம ராகுவும், சப்தம கேதுவும் சஞ்சரிப்பதால் சர்ப்பக் கிரகத்தின் ஆதிக்கத்தில் உங்கள் ராசி இருக்கிறது. எனவே, இன்பமும், துன்பமும் கலந்தே வந்து கொண்டிருக்கும். ஏற்றமும், இறக்கமும் இணைந்தே செயல்படும். வரவும், செலவும் சமநிலையில் இருக்கும். இரவு பகலாக உழைத்து இன்னும் பலன் கிடைக்கவில்லையே என்று நினைத்தவர்களுக்கு, புதனின் வக்ர காலம் மட்டும் வளர்ச்சியைக் கூடுதலாகக் கொடுக்கும்.

இரண்டில் சந்திரனும், 3 இல் சனியும் சஞ்சரிக்கிறார்கள். ஏழரைச சனி விலகிவிட்டது. வாழ்வை வளப்படுத்தும் சனி வரும் பொழுதும், விலகும் பொழுதும் நாம் வழிபட வேண்டியது அவசியமாகும். அந்த அடிப்படையில் சிறப்பு தலங்களுக்கு, சனி விலகிய இரண்டு மாதங்களுக்குள் சென்று வழிபட்டு வந்தால், இனிய பலன்கள் ஏராளமாக நடைபெறும். தனித்து இயங்கும் வாய்ப்பும் தாராளமாக வந்து சேரும்.

குறிப்பாக உள்ளூரிலுள்ள சிவாலயத்தில் உள்ள சனி பகவானுக்கும் எண்ணெய்க் காப்பு சாத்தி, நீலவண்ண வஸ்திரம் அணிவித்து எள் அன்னம் நைவேத்தியம் படைத்து வழிபடலாம். இதனால் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும்.

# சந்தோஷங்களை அதிகம் சந்திக்கும் மாதம் இம்மாதம்

புத-சுக்ர சேர்க்கை ஏற்படும் இம்மாதத்தில் பொருளாதார நிலை உயரும். பூர்வீக சொத்துக்களில் லாபம் கிடைக்கும். சேமிப்பின் ஒரு பகுதியைக் கொண்டு விலையுயர்ந்த பொருட்களையும், அசையா சொத்துக்களையும் வாங்க முற்படுவீர்கள்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

கும்ப ராசியில் ஜனவரி 23 ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர் பார்த்தபடி வந்து சேரும். மனக் கசப்பால் பிரிந்த தம்பதியர் மீண்டும் வந்து சேருவார்கள். பண வரவு திருப்திகரமாக இருக்கும். உடன்பிறந்த சகோதர, சகோதரிகளின் குடும்பத்தில் நடைபெறும் விழாக்களுக்கு உதவி செய்வதோடு, முன்னின்றும் நடத்தி வைப்பீர்கள். உத்தியோகத்தில் இலாகா மாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜனவரி 28 ஆம் திகதி தனுசு ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர இயக்கம் உங்களுக்கு நன்மையைச் செய்யும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் அடையும் பொழுது மிகுந்த யோகத்தை வழங்கும். குறிப்பாக வீடு, இடம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக இருந்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். பிப்ரவரி 8 ஆம் திகதி மகரத்தில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும்.




**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

பிப்ரவரி 10 ஆம் திகதி மீனத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். வாங்கிய இடத்தை விற்க நேரிடுகிறதே என்ற கவலை ஒரு சிலருக்கு மேலோங்கும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு குறைவாக இருக்கும். யோசித்து செயல்பட வேண்டிய நேரமிது. இம்மாதம் பெண் தெய்வ வழிபாட்டால் பெருமைகள் வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

வரவு வந்த மறுநிமிடமே செலவு உருவாகலாம். வாய்ப்புகள் வந்தாலும் உடல் நலக் குறைவால் அதை உபயோகப்படுத்திக் கொள்ள முடியாமல் போகலாம். இருப்பினும் புதனின் வக்ர காலம பொற்காலமாக அமையும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். தாய்வழி ஆதரவு கூடும். தனவரவு திருப்தி தரும். கணவன்- மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். மாதத் தொடக்கத்திலேயே ஆடை, ஆபரண சேர்க்கை இருககும். குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. துர்க்கை வழிபாடு துயரங்களைப் போக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழக்க எதுவுமின்றி நாம்-சம்பூர் மக்கள் இழந்ததை பெற்று விட்டார்-பொன்சேகா

(கொழும்பு)

பல அமைச்சர்கள், பல அதிகாரிகள் என பலராலும் பல வருடங்களாக நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். இந்த அரசிடமும் நாம் ஏமாறத் தயாராக இல்லை.

இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் மறுநாள் எமது குடியிருப்பு மீது குண்டு வீசி துரத்தப்பட்டோம். இன்று வரை நாம் தொடர்ச்சியாக பலவற்றை இழந்த வண்ணமுள்ளோம். இனியும் நாம் அதற்கு தயாராக இல்லை என்று சம்பூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் அறிவிப்பை நாம் ஊடகங்கள் வாயிலாக அறிந்து அவர்களின் கருத்துக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். ஆயினும் இந்த நூறு நாட்களுக்குள் நாம் எமது சொந்த இடமான சம்பூருக்குச் செல்ல வேண்டும்.

இது தொடர்பாக கடந்த ஒன்பது வருடங்களாக நாம் படுமோசமாக கடந்த அரசால் ஏமாற்றப்பட்டுள்ளோம். இதனால் உணவு உட்பட சகலவற்றையும் இழந்த ஜடங்களாக நாம் அலைகின்றோம் என்றும் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், வடகிழக்கின் இறுதி யுத்தம் முதலில் எம்மீதே திணிக்கப்பட்டது. இதில் அகப்பட்டு உடுத்த உடுப்போடு துரத்தப்பட்ட நாம் இன்று பல இழப்புக்களுக்கு மத்தியில் எமது விருப்பத்திற்கு மாறாக எமது காணிகளையும் இழந்து நிற்கிறோம். அயல் கிராமங்களில் மீளக்குடியேறியோர் வைத்த தென்னை காய்கிறது. எமது வாழ்விடங்களில இருந்த தென்னை உள்ளிட்ட பயிரினங்கள்,வடுகள் என சகலவையும் புல்டோஸர் போட்டு அழிக்கப்பட்டுள்ளன.

பூர்வீக விவசாயிகளான எமது மூதாதையர்கள் மூலம் 72 இற்கும் அதிகமான குளங்களையும் பல ஆயிரம் வயல் நிலங்களையும் கொண்டு தொழில் செய்தார்கள். இன்று வெறும் உலர் உணவு கூட இல்லாமல் பரிதவிக்கின்றோம்.

திருகோணமலையில் 200 மீற்றருக்கு ஒரு படை முகாம் அமைந்துள்ளது.

இந்நிலையில் பல கல்விமான்களை உருவாக்கிய எமது பாடசாலையில் கடற்படை முகாம் அமைத்துள்ளது. பல அரச காணி இருக்கையில் எமது பாடசாலைதான் அவர்களுக்கு தேவைப்பட்டுள்ளது. இவ்வாறு எந்த அனுமதியும் இன்றி சுமார் 217 ஏக்கர் காணிகளை அவர்கள் வைத்துள்ளனர். அவை அனைத்தும் மக்களின் வாழ்விடங்கள் முதலீட்டு சபைக்கென 818 ஏக்கரை எமது விருப்பத்திற்கு மாறாக சுவீகரித்துள்ளனர். இதில் 218 குடும்பங்களின் பூர்வீக காணிகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

அனல்மின் நிலையத்திற்கென 505 ஏக்கரும் மின்சார சபைக்கென 40 ஏக்கரும் எடுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் 2 அடி ஆழத்தில் சுத்தமான நீரைக் கொண்ட வாழ்விடங்கள். இவற்றையெல்லாம் விட்டு விட்டு தண்ணீர் இல்லாத மலைக்காடுகளில் வெறும் 20 பேர்ச் காணி வழங்கி தள்ளிவிட மனிதாபிமானமற்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஏக்கர் கணக்கில் வயல் வாழை உள்ளிட்ட தோட்டப் பயிர்களை செய்து வாழ்ந்த நாம் 20 பேர்ச்சில் என்ன செய்வது? கால்நடை வளர்ப்பு, மீன்பிடி என்பனவற்றையும் எங்கு சென்று செய்வது?

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூட இழந்தவை சகலதையும பெற்று விட்டார். நாம் இழந்தவற்றை இந்த 100 நாட்கள் திட்டத்தில் அரசு செய்ய வேண்டும். இல்லையேல் இனியும் எம்மால் பொறுமை காத்து முகாம்களில் முடங்க முடியாது. பாதுகாப்புக்காகவோ தொழில திட்டத்திற்கோ எடுப்பதற்கு அயல் பகுதிகளில் பல அரச காணிகள் உள்ளன. நாம் எமது மூதாதையர்கள் பண்படுத்தி எமக்காக விட்டுச் சென்ற வாழ்வாதாரமான இக் காணிகளாக வைத்திருப்பது மிகவும் அநியாயமான செயலாகும்.

எனவே புதிய அரசும் அமைச்சரும் மீண்டுமொருமுறை எம்மை ஏமாற்றக் கூடாது. எம்மால் இழக்க இனி எதுவும் இல்லை.

மேலும்ஏமாறத்தென்புமில்லை. எமது சொந்த மண்ணில் நாம் குடியமர்த்தப்பட வேண்டும் எனவும் விபரித்தனர்.

புதிய அரசின் நடவடிக்கை தொடர்பாக விபரித்த போதே இக்கருத்துக்களைத் தெரிவித்தனர். இவர்கள் நான்கு முகாம்களில் வாழ்வது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மீட்கப்பட்டுள்ள ஆவணங்கள் அடங்கிய பைகள் குறித்து விரிவான விசாரணை

(கொழும்பு)

மினுவன்கொட - வடினாபஹ பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் பின்னாலுள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட ஆவணங்கள் அடங்கிய கோணிப் பைகள் தொடர்பில் விரிவான வசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கிணற்றில் சந்தேகத்திற்கிடமான கோணிப் பைகள் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் கோப்புக்கள் உள்ளிட்ட ஆவணங்கள் அடங்கிய 19 பைகளை நேற்று முன்தினம் கைப்பற்றினர்.

இந்த ஆவணங்கள் யாருக்கு சொந்தமானது என்பது குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த வீட்டில் முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரத்னவின் இணைப்புச் செயலாளர் தங்கியிருந்ததாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# புதிய ஜனாதிபதியை நம்புகின்றோம்



## கூட்டமைப்பு உறுப்பினர் ஜனா தெரிவிப்பு

(கொழும்பு)

**தற்போது இந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி மலர்ந்துள்ளது. ஜனநாயகத்தைக் கொண்டு நடத்தக் கூடிய புதிய ஜனாதிபதி தெரிவாகியுள்ளார். இந்த புதிய ஜனாதிபதியை நாங்கள் நம்புகின்றோம் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.**

மட்டக்களப்பு, மண்டூர் அக்கடமியின் வருடாந்த பரிசளிப்பு விழா மண்டூரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் புரையோடிப் போயுள்ள தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்பதற்காக சிறுபான்மையின மக்களின் அமோக வாக்குகளால் புதிய ஜனாதிபதி வெற்றி பெற்றுள்ளார் என்பதை இலங்கை மாத்திரமின்றி, சர்வதேசமே உன்னிப்பாக அவதானித்துள்ளது.

எமது சமுதாயம் கடந்தகால ஆயுத மற்றும் அஹிம்சைப்போராட்டங்களினால் கல்வி, உயிர், உடைமைகள் போன்ற அனைத்தையும் இழந்துநிற்கின்றது. இழந்த உயிர்களை விட, ஏனையவைகளை மீட்டெடுக்கவேண்டுமாக இருந்தால், நாம் கல்விக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். அதற்காக வேண்டி எமது எதிர்கால சந்ததியை கல்வியில் சிறந்த முறையில் வளர்த்து எடுப்போமாக இருந்தால், கடந்த காலங்களில் இழந்தவைகளை பெறுவதில் கஷ்டங்கள் இருக்காது. அந்த வகையில், எமது பிரதேசத்தில் கல்வியை சிறந்த முறையில் வளர்த்தெடுப்பதற்காக பல அரசியல்வாதிகள் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

கடந்தகால போராட்ட காலத்தில் உயிரைத் தியாகம் செய்த எத்தனையோ இளைஞர்கள் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு சிறையில் வாடும் இளைஞர்களை விடுவிக்கவேண்டும் என்று நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம். சிறையிலுள்ளவர்களின் விபரங்களை அரசு எம்மிடம் கோரியுள்ளது. மிக விரைவில் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி ஈஸ்வரன் இரத்தினேஸ்வரி**

புலோலி மேற்கு, பூவற்கரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஈஸ்வரன் இரத்தினேஸ்வரி நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சுப்பர் மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**சின்னத்தம்பி வேலாயுதம்**

குமுதெணி அல்வாய் வடமத்தி அல்வாயை பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலாயுதம் கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமைஅன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.



**நாகேந்திரம் பேரின்பநாயகம்**

பண்டத்தரிப்பு, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் யாழ். ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் பேரின்பநாயகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**இறப்பியேல்பிள்ளை மனுவல்பிள்ளை**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இறப்பியேல்பிள்ளை மனுவல்பிள்ளை கடந்த 22 ஆம் திகதி வியாழக் கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி இன்று முற்பகல் 10 மணிக்கு Prince Of Peace Church, 265 Alton Towers Cir, Scarborough, ON M1V 4E7, Canada என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



**கனகசபை உருத்திரகுமாரன்**

யாழ். நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை உருத்திரகுமாரன் கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமைஅன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**சாரிகா ஸ்ரீசிவா**

லண்டனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாரிகா ஸ்ரீசிவா கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு St. Marylebone Crematorium, East End Road, Finchley, London, N2 ORZ, UK என்னும் முகவரியில் நடைபெறும்.



**சயந்தன் அக்ஷ்சயன்**

பிரான்ஸ் Pontault- Combault ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சயந்தன் அக்ஷ்சயன் கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமைஅன்று கால் மானார். அன்னாரின் இறுதிக்கிரி யைகள் நாளை மறுதினம் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு 7 Boulevard de Menilmontant, 75011 Paris, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**செல்லப்பா மார்க்கண்டு**

யாழ். ஈச்சமோட்டையைப்பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா மார்க்கண்டு கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு Dusseldorfer Str. 601, 47055 Duisburg, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தின் ஒத்துழைப்புடனேயே ஜனாதிபதி தேர்தலை ஆதரித்தோம்

## சேனாதிராஜா எம்.பி தெரிவிப்பு

(குருமன்காடு)

தற்போது வந்துள்ள புதிய அரசுக்கு கால அவகாசத்தை வழங்கியுள்ளோம். அவர்களும் எமது பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தாது விடின் தமிழரசுக் கட்சி மாநாட்டில் கூறியபடி ஜனநாயக போராட்டம் வெடிக்கும்.

அதற்கு நாம் எல்லோரும் தயாராகவே இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் தலைவரும் எம்.பியுமான மாவை சேனாதிராஜா.



வவுனியாவில் இடம்பெற்ற தாயகம் அலுவலகம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த தேசத்தில் குறிப்பாக தமிழர், முஸ்லிம்கள், மலையக மக்கள் வாழுகின்ற இடங்களில் ஒரு புதிய நம்பிக்கை உருவாகியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சர்வாதிகாரம் தலைதூக்கியிருந்தது.

தென்னிலங்கையில் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும் என்றும் குடும்ப ஆட்சியையும் அவர்களது ஊழல்களுக்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்துள்ளார்கள். தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் கூட இந்த மகிந்த ஆட்சியில் தமது நிலம், மதம், பண்பாடு, ஜனநாயகம் என்பவற்றை இழந்து நிர்க்கதியாக்கப்பட்டனர்.

தென்னிலங்கையில் இருந்து இந்த ஆட்சியை அகற்ற வேண்டும் என குரல் வலுத்த போது நாங்கள் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்காகவும் இந்த மோசமான ஆட்சியை மாற்ற வேண்டும் என்பதற்காகவும் ஆதரவு கொடுக்க வேண்டியிருந்தது.

எமது நிலங்களை இராணுவத்தின் துணையுடன் பறித்து அங்கு சிங்களவர்களையும் இராணுவ குடும்பங்களையும் குடியமர்த்தினார்கள். இதற்கு இந்த மகிந்தவின் ஆட்சி தான் காரணமாக அமைந்தது.

எமது நிலத்தை நாம் பயன்படுத்த முடியாது எமது அடையாளத்தையும் அழிக்கும் நடவடிக்கை இடம்பெற்ற போது தான் இந்த ஆட்சியை மாற்றக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. எமது மக்களுக்காக மரணித்தவர்களின் கல்லறைகள் கூட தேடி அழிக்கப்பட்டு அங்கு சிங்கள அடையாளங்கள் பொறிக்கப்பட்டன.

எமது மக்கள் மாகாணசபை வந்த போது அதில் உள்ள நன்மை, தீமைகளை பாராது மிகக்கூடுதலாக வாக்களித்தார்கள்.

தென்னிலங்கையில் ஏற்பட்ட இந்த கிளர்ச்சி சர்வதேச ரீதியில் செல்வாக்கு செலுத்தியது. அதனால் தான் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் கவனம் செலுத்தின.

நாம் அவர்களிடம் கதைத்தோம். அதன் அடிப்படையிலேயே எமது முடிவையும் வெளியிட்டோம். மக்கள் எமது கருத்தை கேட்டார்கள். அதனால் பெருவாரியாக வாக்களித்தார்கள். தேர்தலை எதிர்கொள்ளாதுவிடின் அரசியல் கட்சியாக இருக்க முடியாது. அதனாலேயே எமது முடிவை அறிவித்தோம்.

நாம் எதற்காக இதுவரை போராடினோமோ? அதைப் பெற வேண்டுமானால் எமது நிலம் எமது நிலமாக இருக்க வேண்டும். நாங்களும் தேசிய இனம். எங்களுக்கும் இறைமை இருக்கிறது.

எங்களாலும் ஆட்சியாளரை தீர்மானிக்க முடியும் என்பதை இந்த மகிந்தவுக்கு காட்டியுள்ளோம.

மகிந்தவை விரட்ட எடுத்த முடிவு சரியானதே. நாம் இந்த முடிவை எடுத்திராவிட்டால் இன்னும் 8 வருடங்கள் இருந்திருப்பார். 5 வருடங்களுக்குள்ளேயே எமது அடையாளங்கள் முழுமையாக அழிக்கப்பட்டிருக்கும்.

இதனை விளங்கிக் கொள்ளாத சிலர் தேர்தலை புறக்கணியுங்கள், தேர்தலில் யாரையும் ஆதரிக்காதீர்கள், பகிஷ்கரியுங்கள் என்று கூறினார்கள்.

நாங்கள் இந்த புதிய அரசையும் நம்பி நடக்கவில்லை. அந்த அரசுடன் எந்த ஒப்பந்தமும் செய்யவில்லை.

ஆனால் தற்போது எமது மக்களின் காணிப்பிரச்சினை, அரசியல் கைதிகள் பிரச்சினை, தீர்வுத் திட்டம் குறித்து பேசி வருகின்றோம்.

அவர்களும் சிலதை செய்கிறார்கள், செய்வதாக கூறுகிறார்கள். நாம் வவுனியாவில் நடந்த கட்சி மாநாட்டில் இந்த அரசு எமது பிரச்சினையை தீர்க்காது போனால் தைத் திங்களில் ஜனநாயக போராட்டம் வெடிக்கும் என தெரிவித்தோம்.

ஆனால் இன்று புதிய அரசு வந்துள்ளது. சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மீள்குடியேற்றுவதாக சொல்கிறார்கள். வடமாகாணசபையில் மாற்றம் வந்துள்ளது. காணிகளை வழங்குவதாக கூறியுள்ளார்கள்.

இதனால் எமது பிரச்சினையை தீர்க்க காலம் தேவை. அதனை நாம் வழங்கி எமது போராட்டத்தை பிற்போட்டுள்ளோம். எமக்கு தீர்வு கிடைக்காது போனால் எமது மக்களை தயார்ப்படுத்தி கூறியபடி எமது ஜனநாயக போராட்டம் நடக்கும். அதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

இது ஒரு பரீட்சார்த்த காலம். சர்வதேச ஒத்துழைப்புடனேயே நாம் செயற்பட்டோம். எனவே எமக்கான தீர்வு வராது விடின் எமது போராட்டம் தொடரும் எனத் தெரிவித்தார். (அ-2-250)




## பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மன்னாரில் மௌன ஊர்வலம்

(மல்லாவி)

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருக்கேதீஸ்வர புதைகுழியில் தோண்டியெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான விசாரணை மன்னார் மாவட்ட நீதிமன்றில் நடைபெறுவதையொட்டி அவ் வழக்கிற்கு அனுசரணையாக மன்னார் மக்களின் ஒத்துழைப்புடன் மௌன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டு மன்னார் மாவட்ட நீதிமன்றிற்கு அருகில் சென்று குறித்த வழக்கு முடியும் வரை ஒன்று கூடி நிற்கவுள்ளதாக மன்னார் பிரஜைகள் குழுவின் உப தலைவர் அன்ரனி சகாயம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மன்னார் திருக்கேதீஸ்வர புனித குழியில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பான விசாரணை -இன்றையதினம் மன்னார் மாவட்ட நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

அவ் வழக்கு விசாரணையை துரிதப்படுத்தவும் அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்தவும் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணையைத் துரிதப்படுத்தவும் கோரி மேற்படி மௌன ஊர்வலம் மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்திற்கு முன்பாக இருந்து ஆரம்பித்து மன்னார் நகர வீதியூடாக மன்னார் மாவட்ட நீதிமன்றிற்கு அருகில் சென்று அமைதியான முறையில் அடையாளப்படுத்தும் முகமாக இதனை முன்னெடுக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)




கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் தமிழ்ப் பாட ஆசிரியருமான சு.லோகேஸ்வரன் எழுதிய தமிழ் மொழியும் இலக்கியமும் மாணவர்களுக்கான வினாவிடை நூல் வெளியீடானது அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் ஆசிரியர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றபோது...
(படம்:-சாவகச்சேரி செய்தியாளர்)

## கர்ப்பிணிகளுக்கான கிளினிக்கில் மாற்றம்

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட தண்டுவான் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பவதிகளுக்கான கிளினிக் மாதந்தோறும் 2 ஆவது மற்றும் 4ஆவது புதன்கிழமைகளில் நடை பெற்று வந்தது.

இந்நிலையில் மேற்படி கிளினிக்கானது பெப்ரவரி மாதத்தில் இருந்து 2 ஆவது மற்றும் 4ஆவது வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒதியமலை, இத்திமடு, 17 ஆம் கட்டை, தண்டுவான், தட்டாமலை, கரடிப்புலவு, பழம்பாசி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கர்ப்பிணித்தாய்மார்கள் இதனூடாக பயன்பெற முடியும். (அ-2-272)

## மல்லாவி பொதுச் சந்தையை திறந்து வைப்பதில் தாமதம் ஏன்?

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபைக்குரிய மல்லாவி பொதுச் சந்தைக் கட்டட வேலைகள் அனைத்தும்பூர்த்தியாகிய நிலையில் பொதுமக்களின் பாவனைக்கு திறந்து வைக்கப்படாமையால் தாம் பாதிக்கப்படுவதாக இச்சந்தைத் தொகுதியிலுள்ள வியாபார நிலையங்களை கேள்வி மனுகோரல் மூலம் பெற்ற வர்த்தகர்கள், மரக்கறி வியாபாரிகள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டவர்களும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

பல இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்ட குறித்த சந்தையானது அனைத்து வேலைகளும் பூர்த்தியடைந்த நிலையிலும் நடப்பாண்டில் ஜனவரி மாதத்திற்குள் சந்தை திறப்பு விழா நடைபெறும் என துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை திறந்து வைப்பதற்கான முன்னாயத்தங்கள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை.

வர்த்தகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின்படி தற்காலிக கடைகளை மூடி கடந்த ஆண்டு மார்கழி மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னர் புதிய கடைகளுக்கு செல்வதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்தது.

இதன்படி தா்ம் தற்காலிகமாக நடத்திய கடைகளை மூடி சந்தையினுள் அமைக்கப்பட்டுள்ள புதிய வர்த்தக நிலையங்களுக்கு செல்லத் தயாராக இருந்த போதும் சந்தை திறக்கப்படாமையால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இவ் விடயத்தில் கவனமெடுத்து மல்லாவி பொதுச்சந்தையினைத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பான் பணயக் கைதி படுகொலை

# ஐ.எஸ்.ஐ.எஸ் அரக்கர்களின் அட்டூழியம் தொடர்கின்றது

**(கெய்ரோ)**

**ஆயிரத்து 225 கோடி ரூபா கப்பம் கோரி ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் விதித்த கெடு முடிந்ததையடுத்து ஜப்பானிய பணயக்கைதியை நேற்று முன்தினம் கொலை செய்து காணொலி வெளியிட்டுள்ளனர்.**

**பணயக்கைதிகள**

ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாதிகள், எதிரி நாட்டினரை பணயக்கைதிகளாக பிடித்து, தலையை துண்டித்து கொல்வதை வாடிக்கையாக வைத்துள்ளனர். அவர்கள், ஜப்பானைசேர்ந்த கெஞ்சி கோட்டூ, ஹாருணா யுக்கவா என்ற 2 பேரை சிரியாவில் பணயக் கைதிகளாக பிடித்தனர்.

இவர்களில், கெஞ்சி கோட்டூ, பத்திரிகையாளர் ஆவார். போர்ச் செய்திகளை சேகரிக்க சிரியாவுக்கு சென்றிருந்தபோது, தீவிரவாதிகளிடம சிக்கினார். ஹாருணா யுக்கவா, தனியார் பாதுகாப்பு நிறுவன முகவர்.




1,225 கோடி ரூபா அவர்கள் இருவரையும் கொல்லப் போவதாக ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த 20 ஆம் திகதி காணொலி மூலம் மிரட்டல் விடுத்தனர். காணொலியில் தோன்றிய தீவிரவாதி, தங்களுக்கு எதிரான போரில், மேற்கத்தேய நாடுகளுடன் ஜப்பானும் ஈடுபட்டு இருப்பதாக குறை கூறினார். 3 நாட்களில், 1, 225 கோடி ரூபா தராவிட்டால், 2 பேரையும் கழுத்தை அறுத்து கொன்று விடுவோம்' என்று அவர் தெரிவித்தார்.

அந்த தீவிரவாதி, ஏற்கனவே அமெரிக்க, இங்கிலாந்து பணயக்கைதிகள் 4 பேரை தலையை துண்டித்து கொலை செய்தவர் என்று தெரிய வந்தது. தீவிரவாதிகள் பிடியில் இருந்து இரண்டு பணயக்கைதிகளையும் விடுவிக்க ஜப்பான் முயற்சி எடுத்து வந்தது.

**கொலை**

இந்நிலையில், பணயக்கைதிகளில் ஒருவரான ஹாருணா யுக்கவாவை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள நேற்று கொலை செய்தனர். இதுபற்றிய காணொலி படத்தை தீவிரவாதிகள் வெளியிட்டு இருந்தனர். அதை பார்த்து, ஜப்பானிய அரசு கடும் அதிர்ச்சி அடைந்தது.

இது, கொடூரமான, ஏற்க முடியாத செயல் என்று ஜப்பானிய தலைமை அமைச்சரவை செயலாளர் யோஷிஹிடே சுகா தெரிவித்தார். மற்றொரு பணயக்கைதியான பத்திரிகையாளர் கெஞ்சி கோட்டூவை உடனடியாக விடுதலை செய்யுமாறு அவர் வற்புறுத்தி கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)

### எபோலா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

சியாரா லியோனில், எபோலா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அந்நாட்டின் ஜனாதிபதி, எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் நோய்த்தாக்கத்திலிருந்து நாடு முழுமையாக விடுபடும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். நாட்டில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக விதிக்கப்பட்டிருந்த அனைத்துக் கட்டுப்பாடுகளையும் தளர்த்தி அவர் உத்தரவிட்டுள்ளார்.

நாடு நோய்த்தாக்கத்தில் இருந்து வெளிவரத் தொடர்ந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் நல்ல பலனை தந்துள்ளதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி கொரோமா, இனி சமூக, பொருளாதார மீட்சியில் கவனம் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ஒரு நாளைக்கு 60 பேர் எபோலாவால் பாதிக்கப்பட்டு வந்த சியாரா லியோனில் தற்போது நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அந்நாட்டின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. (இ-5)

### பின்தொடர்ந்த பராக் ஒபாமா

டுவிட்டர் பக்கத்தில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனை பின்தொடர்வதற்கு பதிலாக அவரது பெயரில் இருக்கும் மற்றொரு நபரை தவறுதலாக பின்தொடர்ந்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா.

உலக அரசியல் தலைவர்கள் மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும் நெருங்கிய நண்பர்களாகவும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## கடும் குடிநீர் பஞ்சத்தினை எதிர்நோக்குகிறது பிரேசில்

பிரேசில் நாட்டில் மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள பகுதிகள் மிக மோசமான தண்ணீர் பஞ்சத்தை எதிர்கொள்வதாக அந்நாட்டின் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் இஸபெல்லா டெய்க்ஸெரியா தெரிவித்துள்ளார். 1930க்குப் பிறகு இவ்வளவு மோசமான பஞ்சம் ஏற்பட்டதில்லை என அவர் கூறியுள்ளார்.

தலைநகர் பிரெசிலியாவில் நடந்த அவசரநிலைக் கூட்டத்திற்குப் பிறகு பேசிய அவர், சா பாலோ, ரியோ டி ஜெனிரோ, மினா கெரியா ஆகிய மாநிலங்கள் தண்ணீரைச் சேமிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். இந்த தண்ணீர் பிரச்சினை மிகக் கவலையளிப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த வறட்சியின் காரணமாக தொழிற்றுறை, விவசாயம் ஆகியவை பாதிக்கப்படும் என்பதால், பிரேசிலின் பொருளாதாரத்திற்கு இது பின்னடைவை ஏற்படுத்தக்கூடும்.

நீர் மின் நிலையங்களில் தண்ணீர் குறைந்திருப்பதால், மின் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.

கோடை காலம் நெருங்குவதால் மின்சாரத் தேவை அதிகரித்திருக்கும் நிலையில் இந்த உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (இ-5)

## தீவிரவாதிகளின் தாக்குதலில் ஈராக்கில் 7பேர் உயிரிழந்தனர்

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 பத்திரிகையாளர்கள் உட்பட 7 பேர் பலியாகினர்.

ஈராக் தலைநகர் பக்தாத் அருகே உள்ள முக்தாதியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 பத்திரிகையாளர்கள் உட்பட 7 பேர் பலியானதாக அல்-கேதார் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட தொலைக்காட்சி நிறுவனத்தின் அலி அல்-அன்சாரி என்பவரும் மற்றுமொருவரும் பலியானதாகவும், அஹமீத் மற்றும் குஸேஷஹீப் என்ற இருவர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### பிரிட்டனின் அரைக்கம்ப கொடிகளால் விமர்சனம்

சவுதி மன்னர் அப்துல்லாவின் மரணத்தைத் தொடர்ந்து பிரிட்டனில் அரச கட்டடங்களில் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்ட நிகழ்வு பொதுமக்கள் மத்தியில் கடுமையான விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது.

வெளிநாட்டு மன்னர் ஒருவர் உயிரிழந்தால் கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்கவிடுவது பிரிட்டனின் வழக்கம்.

எனினும், சவுதி மன்னரின் மரணத்துக்கு கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்கவிட்டமையை சில அரசியல்வாதிகளும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பத்திரிகைகளும் எதிர்த்துள்ளன.

சவுதியில் பெண்களுக்கு எதிரான பாரபட்சமான போக்கும் கருத்துச் சுதந்திரத்துக்கு உள்ள மட்டுப்பாடுகளும் மதச் சுதந்திரத்துக்கு உள்ள கட்டுப்பாடுகளும் நிலவுகின்ற சூழ்நிலையில் அந்நாட்டு மன்னருக்கு பிரிட்டனின் பாரம்பரியமான மரியாதை அஞ்சலி பொருத்தமற்றது என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

சவுதியின் சவுக்கடி மற்றும மரண தண்டனை போன்ற நீதிமன்ற தண்டனை முறைகளும் மனித உரிமை ஆர்வலர்களின் விமர்சனத்துக்கு காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## உக்ரைனில் உள்நாட்டுப் போர்; ரொக்கெட் வீச்சில் 30பேர் பலி!



ரஷ்யா அருகேயுள்ள உக்ரைனில் கிழக்கு பகுதியில் தன்னாட்சி உரிமை கேட்டு கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் போராட்டம் நடந்து வருகிறது. ரஷ்யா ஆதரவாளர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கிழக்கு உக்ரைனில் டொனெக்ஸ், லூகான்ஸ் பகுதிகளில் பெரும்பாலான இடங்களை பிடித்து தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

அவற்றை மீட்க உக்ரைன் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் அங்கு உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது. இரு தரப்பு சண்டையில் 5 ஆயிரம் பேர் பலியாகினர். அதைத்தொடர்ந்து கடந்த செப்டெம்பரில் மின்ஸ்க் நகரில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

இந்த நிலையில் தற்போது மீண்டும் அங்கு உள்நாட்டு போர் மூண்டுள்ளது. கிழக்கு உக்ரைனில் மரியுபோல் என்ற துறைமுக நகரம் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. அதை மீட்கும் நடவடிக்கையில் இராணுவம் இறங்கியுள்ளது.

இதனால் அங்கு இரு தரப்புக்கும் இடையே கடும் சண்டை நடக்கிறது. இதற்கிடையே நேற்று முன்தினம் மரியுபோல் நகரம் மீது கிளர்ச்சியாளர்கள் ரொக்கெட்டுகளை வீசி தாக்கினார்கள்.

இத்தாக்குதலில் பொது மக்கள் 30 பேர் பலியாகினர். 83 பேர் காயம் அடைந்தனர். இந்த ரொக்கெட் நீண்ட தூரம் சென்று தாக்கும் திறன் படைத்தது. இந்த துறைமுகத்தில் இருந்துதான் உக்ரைன் ஸ்டீல மற்றும் உணவு தானியங்களை ஏற்றுமதி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்யா ஆயுதம் தந்து உதவுவதாக உக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது. அதை ரஷ்யா மறுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடிக்க முடியுமாம்

## பில்கேட்ஸ் உறுதி

**எய்ட்ஸ் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து உருவாக்கப்பட்டாலோ அல்லது அந்த நோயை எதிர்க்கும் புதிய மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டாலோ அடுத்த 15 ஆண்டுகளுக்குள் எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கையை 95 சதவீதம் குறைத்துவிடலாம் என்று மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் நிறுவுநர் பில் கேட்ஸ் தெரிவித்துள்ளார்**



எச்.ஐ.வி. 'வைரஸ் கிருமிக்கு எதிரான ஒரு மருந்து 2030இற்குள் கண்டறியப்படும் என்று தாம் நம்புவதாக டாவோஸில் நேற்று நடந்த உலகப் பொருளாதார மன்றக் கூட்டத்தில் பேசுகையில் பில் கேட்ஸ் நம்பிக்கை வெளியிட்டார்.

எய்ட்ஸ் நோய்க்கு மருந்துகள் கண்டறிவது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள பில் மற்றும் மிலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை பல மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

எச்.ஐ.வி. தொற்று குறித்த விழிப்புணர்வு அதிகமாகியுள்ளதன் காரணமாக எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்படுவோர்களின் எண்ணிக்கை அண்மைய ஆண்டுகளாக குறைந்து வருகிறது.

அவ்வாறே இந்த நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்டவர்களும் முன்பை விட அதிகநாட்கள் வாழும நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தள்ளார். (இ-5)

## தேசிய நிவாரண நிதியாக

# 7800 கோடி கோரி ஒபாமாவிற்கு கடிதம்

பீகாரில் ஒபாமாவிற்கு கடிதம் எழுத முயற்சி செய்ததாக பீகார் கயா பகுதியைச் சேர்ந்த இனாம் ராஜா என்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது குறித்து பொலிஸ் தரப்பில் கூறப்படுவதாவது, பீகார் மாநிலம் போதிகயாவில் உள்ள இணையத்தள மையத்திற்கு இனாம் ராஜா (வயது 40) என்றவர் வந்தார். அங்கு வந்த இனாம் ராஜா ஒபாமாவிற்கு கடிதம் அனுப்ப வேண்டும் என்று கடையின் உரிமையரளரிடம் கேட்டார். இதனால் அதிர்ச்சி அடைந்த கடையின் உரிமையாளர உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்தார்.

பொலிஸார் வருவதற்குள் இனாம ராஜா ஒபாமாவிற்கு உருது மொழியில் கடிதம் எழுதி வைத்திருந்தார். அக்கடிதத்தில் தேசிய நிதியாக 130 டொலர் (இந்திய ரூபாயின் மதிப்பு 7800 கோடி ரூபா) அனுப்ப வேண்டும் என்று அக்கடித்தில் குறிப்பிட்டிருந்தார்.

பொலிஸார் விசாரணையில் அவர் மனநிலை பாதிக்கபட்டவர் என்பது தெரியவந்தது. இவ்விவகாரத்தின் தன்மை கருதி மாநில தீவிரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு இனாம் ராஜாவை பற்றிய தகவல் கூறப்பட்டுள்ளது. மேலும் அவர் தீவிரவாதிகளுடன் தொடர்பு உள்ளதா? என பொலிஸார அவரிடம விசாரித்து வருகின்றனர். (இ-5)

# வேகமாக பரவுகிறது பன்றிக் காய்ச்சல்

## ஒரே நாளில் 50 பேர் பாதிப்பு



தெலுங்கானா மாநிலத்தில் தற்போது 229 பேருக்கு பன்றிக் காய்ச்சல் நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று முன் தினம் ஒரே நாளில் 50 பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்பது மருத்துவ பரிசோதனையில் தெரிய வந்துள்ளது. தெலுங்கானா மாநிலத்தில் பன்றிக் காய்ச்சல் நோய் வேகமாக பரவி வருகிறது.

அனைத்து மாவட்ட தலைமை வைத்தியசாலை களிலும் பன்றிக் காய்ச்சலுக்கு தனி படுக்கைகள் அமைக்கப்பட்டு மருந்துகள், முகக் கவசங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

### 25 பேர் பலி

ஐதராபாத் நகரில் பன்றிக் காய்ச்சலின் தீவிரம் அதிகமாக உள்ளது. இதுவரை பன்றிக் காய் ச்சலு கது 25 பேர் பலியாகி உள்ளதாக அதிகார பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு தெலுங்கானா மாநிலத்தில் இதுவரை 893 பேருக்கு பன்றிக் காய்ச்சலுக்கான மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டதில், 229 பேருக்கு இந்த நோய் தாக்கி இருப்பது தெரியவந்தது. இதில் 25 பேர் மரணமடைந்துள்ளனர். மற்றவர்கள் தொடர்ந்து பல் வேறு அரசு, தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். முதல்வர் சந்திரசேகரராவ், பிரதமர் மோடியிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மத்திய மருத்துவ குழுவினர் ஐதராபாத், மகபூப் நகர், நல்கொண்டா ஆகிய இடங்களில் ஆய்வு மேற்கொண்டனர்.

இதனை தொடர்ந்து தெலுங்கானா முழுவதும் போர்க் கால அடிப்படையில் பன்றிக் காய்ச் சல நோயைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் திடீர் திருப்பம்; பவானிசிங் இராஜினாமா



தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து அரச சட்டத்தரணி பவானிசிங் திடீரென இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸ் அதிகாரி குணசீலனிடம் அளித்துள்ளார்.

இதனிடையே அரச சட்டத்தரணி பவானிசிங்கை சமாதானப்படுத்தும் முயற்சியில் தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸார் இறங்கியுள்ளனர். இராஜினாமாவை வாபஸ் பெறுவது தொடர்பாக பவானி சிங்கிடம் ஜெயலலிதாவின் சட்டத்தரணி செந்தில் தனிஅறையில் அரைமணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான சொத்துக்குவிப்பு வழக்கு 2005ஆம் ஆண்டு சென்னையில் இருந்து பெங்களூருக்கு மாற்றப்பட்டது. அப்போது இவ்வழக்கிற்கு அரச சட்டத்தரணியாக பி.வி.ஆச்சார்யா நியமிக்கப்பட்டார். வழக்கு இறுதிக் கட்டத்தை எட்டிய நிலையில் 2012 ஆம் ஆண்டு அவர் இராஜினாமா செய்தார்.

கடந்த 2013 பெப்ரவரி 28இல் பவானிசிங் அரச சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார். ஜெயலலிதாவுக்கு ஆதரவாக அவர் செயற்படுவதாக தி.மு.க. தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது. மேலும் விசாரணையின் போது வழக்கை தாமதிக்க முயன்றதாக பவானிசிங்கிற்கு நீதிபதி டி"குன்ஹா 65 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

கர்நாடக உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா பிணை கோரியபோது பவானிசிங் ஆட்சேபம் தெரிவிக்காததால் அந்த மனுவை விசாரித்த நீதிபதி சந்திரசேகரா, அரச சட்டத்தரணி தனது பொறுப்பை உணர்ந்திருக்கிறாரா? என கேள்வி எழுப்பினார். இந்நிலையில் பவானி சிங்கே அரச சட்டத்தரணியாக தொடர தமிழக அரசு ஆணை பிறப்பித்தது.

ஜெயலலிதா மீதான வழக்கில் அவர் அரச சட்டத்தரணியாக தொடர்ந்தால் நீதி கிடைப்பது கேள்விக் குறி ஆகிவிடும் எனக் கூறி தே.மு.தி.க. டிராபிக் ராமசாமி உள்ளிட்டோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

### திடீர் இராஜினாமா

கர்நாடக உயர் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சொத்துக்குவிப்பு வழக்கின் விசாரணை முடிந்ததும் அனைவரும் நீதிமன்றத்தில் இருந்து வெளியேறினர். ஆனால் பவானிசிங் மட்டும் வெளியே வராமல் நீண்ட நேரம் தனது இருக்கையில் அமர்ந்திருந்தார். தி.மு.க. சட்டத்தரணி சரவணனுடன் ஏற்பட்ட மோதலின் காரணமாக அவர் மிகுந்த மன உளைச்சலுடன் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி குணசீலனை அழைத்து தனது இராஜினாமா கடிதத்தை பவானிசி[illegible] அளித்துள்ளார்.

அதில் தொடர் வேலைப்பளு காரணமாக உடல்ரீதியாக நான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். அண்மையில் தேவையில்லாத மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் என்னால் தொடர்ந்து அரச சட்டத்தரணியாக நீடிக்க முடியாது. எனவே அரச சட்டத்தரணி பொறுப்பில் இருந்து இன்றுமுதல் விடுபடுகிறேன் என குறிப்பிட்டுள்ளார். (இ-5)

## பாரதச் செய்தி

# ஒபாமா வருகையை எதிர்த்து மார்க்சிஸ்ட் கட்சி போராட்டம்




அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் வருகையைக் கண்டித்து ஐதராபாத்தில் உள்ள அந்நாட்டு துணைத் தூதரகத்தை முற்றுகை யிட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சியினர் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

ஐதராபாத்தில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தை நேற்று முன்தினம் (சனிக்கிழமை) முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரை பொலிஸார் தடுத்து நிறுத்த முயற்சித்தனர். ஆனால் அதற்கு முன்பாக ஒபா மாவின் உருவ பொம்மையை அக்கட்சியினர் எரித்து தங்களது எதிர்ப்பினை வெளிபபடுத்தினர். இதனை அடுத்து போராட்டத்தில் ஈடுப்பட்ட மார்க்சிஸ்ட் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என பலர் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தால் ஐதராபாத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

துணைத் தூதரகம் அமைந்திருக்கும் பேர டைஸ் பேகம்பெட் முக்கிய வீதிகள் போக்குவரத்து நெரிசலால் ஸ்தம்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது
என்பது வல்லவன் வகுத்ததடா... வருவதை
எதிர் கொள்ளடா... – கண்ணதாசன்

வலம்புரி

T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு புதிய அரசு ஒத்துழைக்க வேண்டும்

வன்னியில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் மீண்டும் ஜெனிவாவில் விவாதம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் இந்த விவாதத்தின் போது, மகிந்த ராஜபக்சவின் அரசு பிரசன்னமாகி இருக்காது என்பது ஒரு பெரும் மாற்றம் எனலாம்.

வன்னியில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு கடுமையான கவனஞ்செலுத்தி வருகின்றது.

எனினும் ஐ.நா சபையின் மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை மகிந்த அரசு மிக மோசமாக அலட்சியம் செய்தது.

அத்தோடு ஐ.நா சபையின் தகுதி வாய்ந்த அதிகாரிகளைக் கடுமையாக விமர்சித்து அவர்களைக் கேலி செய்தது. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளராக இருந்த நவநீதம்பிள்ளையை, மகிந்த தரப்பு கடுமையாக ஏளனம் செய்திருந்தது நாம் அறிந்ததே.

இதில் மகிந்தவின் ஆட்சியில் அமைச்சராக இருந்த மேர்வின் சில்வா, நவநீதம்பிள்ளையைத் திருமணம் செய்ய விரும்புகிறேன் எனக்கூறி தன்னைக் கீழ்த் தரமான அரசியல்வாதியாகக் காட்டிக்கொண்டார்.

இப்படியாக மகிந்தவின் ஆட்சியில், உலகப் பொது அமைப்பான ஐ.நா சபை அசிங்கப்படுத்தப்பட்டது. இலங்கையின் உள்விவகாரங்களில் ஐ.நா சபை தலையிட முடியாதென்ற இறுமாப்புகளும் சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற மகிந்த ராஜபக்சவின் தடிப்பும் அமெரிக்காவிற்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

ஒரு கழுகிற்கு முன்னால் எலிப்பிள்ளை ஒன்று தனது சீற்றத்தைக்காட்டி நிற்பதாகவே அமெரிக்கா கருதியது. இதன் விளைவாகவே மகிந்த ராஜபக்ச பதவி இழக்க வேண்டியதாயிற்று. அமெரிக்காவோடு பகைத்தால் என்ன நடக்கும் என்பதை மகிந்த மட்டுமன்றி இனிவரும் ஆட்சியாளர்களும் அறிந்து வைத்திருப்பது நல்லது.

எதுவாயினும் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் கொண்டு வரப்படும் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் ஐ.நா சபை முன்மொழியும் தீர்மானங்களை மைத்திரியின் அரசு தலைவணங்கி ஏற்கும் என நம்பலாம்.

இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பது உண்மையாயினும், இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டாலும் அதனால் நிம்மதி அடைய முடியாத அளவில் பேரிழப்புகளைச் சந்தித்த தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்ற நிதர்சனத்தை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

ஆம், வன்னிப் போரில் எல்லாப் பிள்ளைகளையும் பறிகொடுத்து இந்த வாழ்வே வேண்டாம் என்ற மன நிலையில் வாடும் பெற்றோர்கள்; பெற்றோர்களை இழந்து பராமரிப்பு நிலையங்களில் தங்கியிருக்கும் பிள்ளைகள் என்ற பெரும் துன்பப்பட்டியல் எங்களிடம் இருக்கிறது. இந்த இழப்புகளின் வலிகள் இனப்பிரச்சினைத் தீர்வால் ஒருபோதும் சீராக்கம் பெறமாட்டாது.

எனவே தமிழ் மக்களை வதைத்தவர்கள் கழுமரத்தில் ஏற்றப்படவேண்டும். ஆட்சி பீடத்தில் இருந்து கொண்டு ஓர் இனத்திற்கு துரோகம் செய்தவர்கள் தூக்கில் தொங்கும் போது இந்த உலகம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ளும். பாதிக்கப்பட்டவர்கள், தெய்வம் நிற்றறுத்தது என்றேனும் ஆறுதல் கொள்வர்.

ஆகையால் போர்க்குற்றம் தொடர்பில் எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா சபையில் கொண்டுவரப்படும் தீர்மானத்திற்கு மைத்திரி அரசு பூரண ஒத்துழைப்பு வழங்குவது அவசியம்.

அதேநேரம் ஜெனிவாவில் ஏற்கெனவே எடுத்திருந்த, போர்க்குற்றம் தொடர்பிலான சர்வதேச விசாரணை என்ற தீர்மானம் எந்த வகையிலும் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படாமல் விரைவாக சர்வதேச விசாரணையை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன அழிப்பில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதற்கு இது மிக மிக அவசியம்.

# சிங்கள - முஸ்லிம் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் குழு

(கொழும்பு)

சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த விசேட நிபுணர் குழு ஒன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அண்மைய ஆண்டுகளாக சிங்கள முஸ்லிம் மக்களுக்கு இடையில் முரண்பாட்டு நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

இந்த முரண்பாடுகளை களைந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த புத்திஜீவிகளைக் கொண்ட விசேட நிபுணர் குழுவொன்றை அமைக்க, அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக முஸ்லிம் சமய விவகார அமைச்சர் மொஹமட் ஹலீம் தெரிவித்துள்ளார்.

சிங்கள-முஸ்லிம் மக்களுக்கு இடையில் மிக நீண்ட காலமாக நல்ல உறவு காணப்பட்டது. ஆனால் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளினால் இந்த நல்லுறவு பாதிக்கப்பட்டது.

சிங்கள - முஸ்லிம் மக்களுக்கு இடையில் நீண்ட கால நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

புதிதாக நியமிக்கப்படவுள்ள நிபுணர் குழுவில் பத்து பேர் அங்கம் வகிப்பார்கள்.

இந்த நிபுணர் குழுவில் சிங்கள - முஸ்லிம் இனங்களை பிரதிநிதித்துவம செய்யும் உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள் என அவர் சிங்கள பத்திரிகையொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (எ-1)

# வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு சிறை

(கொழும்பு)

வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் கமல் ரஷிக அமரசிங்கவிற்கு நுவரெலிய நீதவான் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கொன்றிலேயே அவருக்கு ஒருவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

2009-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம திகதி ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவில் அனுமதியின்றி நுழைந்தமை மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டிருந்தது.

இதேவேளை இந்த வழக்கு விசாரணைகளில் வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆஜராகாமையால் அவர் இன்றி வழக்கு விசாரணைகள் முடிவுற்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அவரை விரைந்து கைது செய்யுமாறும் பிடியாணை பிறப்பித்த நீதவான், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இவ்வாறு நீதிமன்றத்தை புறக்கணிப்பது தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

குற்றவாளியான வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரசிக அமரசிங்க ஜனவரி 19-ம் திகதி விடுமுறையில் சிங்கப்பூர் சென்றிருக்கும் நிலையில் அவருக்கு இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (எ-1)

# பஸ் விபத்து 9 பேர் காயம்

(கொழும்பு)

மொனராகலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியதனால் அதில் பயணித்த 9 பேர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கும்பக்கன்ன பிரதேசத்தில் பஸ் சாரதியினால் பஸ்ஸின் வேகத்தை கட்டுபடுத்த முடியாமல் இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்களில் இரண்டு பெண்களும் அடங்குவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பஸ்ஸின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (எ-1)

# பொதுத் தேர்தல் வரை கிழக்கில் ஆட்சி மாற்றமில்லை

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் ஆட்சி மாற்ற விடயம் தொடர்ந்தும் தீர்க்கப்படாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே இந்த நிர்வாகம் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கீழ் இருந்து வந்தது.

எனினும் மத்திய அரசாங்கத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம், கிழக்கு மாகாண சபையிலும் ஆட்சிமாற்றம் ஏற்படும் சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

இதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படும் போதே, அங்கு புதிய மாகாண அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான ஏது நிலை காணப்படுகிறது.

எனினும் இந்த இரண்டு கட்சிகளும் இன்னும் விட்டுக் கொடுக்காத போக்கை கடைபிடித்து வருகின்றமையால், கிழக்கு மாகாண சபையின் புதிய ஆட்சி குறித்து ஐயநிலை நிலவி வருகிறது.

இந்த நிலையில் எதிர்வரும் பொதுத் தேர்தல் இரண்டு கட்சிகளுக்கும் முக்கியமானது என்ற அடிப்படையில், கிழக்கு மாகாண ஆட்சி தொடர்ந்தும் மாற்றத்துக்கு உள்ளாகாமல் இருக்கும் என்றே நம்பப்படுகிறது. (எ-1)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்ற உத்தரவு

இலங்கையின் பொலிஸ் அதிகாரிகள் 6 பேர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உள்துறை அமைச்சின் செயலாளர் இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்படி மேல்மாகாண சிரேஸ்ட உதவி பொலிஸ் அதிபர் அநுர சேனாநாயக்க, கொழும்பு தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வடமாகாண சிரேஸ்ட உதவி பொலிஸ அதிபர் பூஜித் ஜெயசுந்தர மேல்மாகாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண சிரேஸ்ட உதவி பொலிஸ் அதிபர் லலித் ஜெயசிங்க வடமாகாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண உதவி பொலிஸ் அதிபர் நந்தன முனசிங்க ஊவாவுக்கு மாற்றப்பட்டுள்ளார். தென்மாகாண உதவி பொலிஸ் அதிபர் சிடி விக்கிரமரத்ன சப்ரகமுவவுக்கு மாற்றம் பெற்றுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தின் உதவி பொலிஸ் அதிபர் ரவி வித்தியாலங்கார பொலிஸ் தலைமையகத்துக்கு மாற்றம் பெற்றுள்ளார். (எ-1)

# இராணுவத்தினருக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட உள்ளது.

அரசியல் ரீதியான காரணிகளுக்காக இராணுவ சேவையிலிருந்து கட்டாய அடிப்படையில் ஓய்வுறுத்தப்பட்ட 5 மேஜர் ஜெனரல்கள் உள்ளிட்ட 14 இராணுவ உயர் அதிகாரிகளுக்கு ஜனாதிபதியால் மன்னிப்பு வழங்கப்பட உள்ளது.

இந்த அதிகாரிகள் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக செயற்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் கட்டாய ரீதியாக ஓய்வுறுத்தப்பட்டிருந்தனர்.

ஐந்து பிரிகேடியர்கள், ஒரு கேர்ணல், ஒரு லெப்டினனட் கேணல், இரண்டு கப்டன்கள் உள்ளிட்டோரும் இதில் அடங்குகின்றனர்.

இவ்வாறு அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டு கட்டாய ஓய்வு அளிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் சூரியபண்டார, அவுஸ்திரேலியாவிற்கு குடிபெயர்ந்து அங்கு மாரடைப்பினால் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இராணுவ அதிகாரிகளிடமிருந்து பறிக்கப்பட்ட பட்டங்கள் பதவிகள் அனைத்தும் மீள அளிக்கப்பட உள்ளன. (எ-1)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வாழ்வில் வெற்றி ஒளி வீசட்டும்




சூடுள்ள பாத்திரத்தைக் கந்தைத் துணி உதவி கொண்டோ, கொரடாவின் உதவி கொண்டோ, அடுப்பிலிருந்து இறக்கிப் பயன் காண்பது போல, கருத்து வேறுபாடு உடையவர்களோடு மனநிலையுணர்ந்து, அன்பு காட்டல், பொறுமை கொள்ளுதல், கடமையுணர்ந்து ஆற்றல் எனும் மூன்றிணைப்புத்திறன் கொண்டு பழகி வாழ்வில் வெற்றியும், மகிழ்ச்சியும், அமைதியும் காணவேண்டும். இந்த முறையில் விழிப்போடு வாழ்வை நடத்தும் போது வெறுப்புணர்ச்சி என்ற தீமை அணுகாது. சினமும், கவலையும், எழா. வளரா. வாழ்வில் நாளுக்கு நாள் அன்பும், இரக்கமும், அமைதியும் ஓங்கும்.

இந்த விளக்கத்தை மனதில் நன்றாகப் பதிய வைத்து கொண்டு கணவன் மனைவி, பெற்றோர், மக்கள், உடன்பிறந்தோர், நண்பர்கள் என்ற எல்லா உறவுகளிலும் பயன்படுத்தி முதலில் வெற்றிபெறுங்கள்

இதன் விளைவாக வெளி உலக மக்களிடம் கொள்ளும் தொடர்பிலும் உங்கள் வாழ்வின் மற்றெல்லாப் பகுதிகளிலும் வெற்றி ஒளி வீசும். போதனை மட்டும் போதாது. சாதனை செய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணியை வீழ்த்தி தொடரை வென்றது நியூசிலாந்து





இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையே நடைபெற்ற 6 ஆவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 120 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. முன்னதாக நாளைய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதன்படி களமிறங்கிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 315 ஓட்டங்களை குவித்தது.

அதிக பட்சமாக வில்லியம்சன் 97 ஓட்டங்களையும் ரெய்லர் 96 ஓட்டங்களையும் அண்டர்சன் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பின்னர் ஆடிய இலங்கை அணி 40.3 ஓவர்களில் 195 ஓட்டங்களில் சுருண்டது. சங்கக்காரா அதிக பட்சமாக 81 ஓட்டங்கள் எடுத்தார். அண்டர்சன் 4 விக்கெட்டை கைப்பற்றினார்.

இந்த வெற்றி மூலம் 7 போட்டி கொண்ட தொடரை நியூசி லாந்து 4-1 என்ற கணக்கில் கைப்பறறியது. 7 ஆவது மற்றும் கடைசி ஆட்டம் வருகிற 29 ஆம் திகதி நடக்கிறது.

போட்டியின் ஆட்டநாயகராக 4 விக்கெட்டினை கைப்பற்றிய நியூசிலாந்து அணியின் அண்டர்சன் தெரிவானார். (க)

# யாழ்ப்பாணக் கல்லூரியை வீழ்த்தியது மானிப்பாய் இந்துக் கல்லூரி



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், 19 வயதுப்பிரிவு பிரிவு 3 அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள்கொண்ட இரண்டு நாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டமொன்று கடந்த 22,23 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது.

பிரதீபனின் அசத்தலான 56 ஓட்டங்கள் மற்றும் 9 விக்கெட்டுக்களின் உதவியுடன் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 9 விக்கெட்டுகளால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை அபார வெற்றியீட்டியது.

நாணயச் சுழற்சியில் வென்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதலில் களத்தடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி டியோன் மற்றும் பிரதீபனின் அரைச்சதங்களின் உதவியுடன் தனது முதல் இன்னிங்சில் 9 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் டியோன் 61 ஓட்டங்களையும், பிரதீபன் 56 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக சிந்துயன் மற்றும் மதூபன் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்சில் துடுப்பாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பந்துவீச்சிற்கு தாக்குப்பிடிக்க முடியாது தடுமாறி 30.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 83 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் ரவிவர்மன 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பில் பிரதீபன் 11 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 8 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து பலோன் முறையில் தனது 2ம் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 130 ஓட்டங்களுக்கு தமது சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதில் மதனரூபன் 30 ஓட்டங்களையும் வாகீஷ் 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் குகப்பிரஷாந் 3 விக்கெட்டுகளையும் பிரதீபன் மற்றும் கயன் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

7 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கோடு 2 ஆம் இன்னிங்சில் துடுப்பாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஒரு விக்கெட்டை இழந்து 10 ஓட்டங்களைப் பெற்று இப் போட்டியில் 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (க-23)

# விக்ரம், இராஜன், கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி ஜொலிஸ்ரார் வி.கழகம் வெற்றி

விளையாட்டுச் செய்திகள்



விக்ரம்- இராஜன்- கங்கு ஞாபகார்த்தமாக கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் வருடாவருடம் நடத்தும் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் முதல் ஆட்டத்தில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

இச்சுற்றுப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம், ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம், சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ்.பல்கலைக் கழக அணி ஆகிய நான்கு அணிகளை உள்ளடக்கி 30 ஓவர்களை கொண்டு இந்த துடுப்பாட்ட சுற்றுப் போட்டி இடம்பெறுகின்றது.

முதல் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜொலிஸ்ரார் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது. இதற்கமைவாக முதலில் துடுப் பெடுத்தாடிய கே.சி.சி.சி அணி 25.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அனோஜன் 26 ஓட்டங்களையும், உமாநாத் 24 ஓட்டங்களையும், யனுதாஸ் 18 ஓட்டங்களையும், பார்தீபன் 15 ஓட்டங்களையும், வல்லவகுமாரன் 14 ஓட்டங்களையும் கே.சி.சி.சி அணிக்கு பெற்றுக்கொடுத்தனர்.

ஜொலிஸ்ரார் அணி சார்பாக மதுஷன் 6 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுகளையும், அருண் 3 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களை வழங்கி 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 156 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 28.1 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் மதுஷன் 41 ஓட்டங்களையும், மணிவண்ணன் 24 ஓட்டங்களையும், பகிரதன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும், உமாதரன் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

கே.சி.சி.சி அணி சார்பாக பவிதரன் 6 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்கள் வழங்கி இரண்டு விக்கெட்டுகளையும், சாம்பவன் 6 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்கள் வழங்கி 2 விக்கெட்டுக்களையும், யனுதாஸ் 4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்கள வழங்கி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் வெற்றி வாய்ப்பு கே.சி.சி.சி அணி பக்கம் இருந்த போதும் ஆட்டத்தின் இறுதி நேரத்தில் கே.சி.சி.சி அணியினரின் முறை தவறிய பந்து வீச்சு, அகலப் பந்து வீச்சுக்கள் மற்றும் தவறவிடப் பட்ட பிடிகள் என்பனவற்றால் வெற்றி வாய்ப்பு ஜொலிஸ்ரார் அணிக்கு மாறியது. (க)

# இணுவில் மேற்கு இ.கழகத்திற்கு விளையாட்டு உபகரணம் கையளிப்பு



யாழ்ப்பாணம் இணுவில் மேற்கு இளைஞர் கழகத்திற்கு அண்மையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வட மாகாணசபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்துள்ளார்.

வட மாகாணசபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பிரமாண அடிப்படையிலான நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களே கையளிக்கப் பட்டுள்ளன. இணுவில் மேற்கு இளைஞர் கழக நிர்வாகிகள் இவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளனர். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ☆கார்ல்ரன் மிட் மும்முனைத் தொடர்

# வாழ்வா - சாவா ஆட்டத்தில் இன்று இந்தியா - ஆஸியை எதிர்கொள்கிறது



முத்தரப்பு ஒருநாள் தொடரில் அடுத்தடுத்த தோல்விகளைச் சந்தித்த இந்திய அணி, வாழ்வா- சாவா ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை இன்று எதிர்கொள்ளுகிறது.

அவுஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் கார்ல்ரன் மிட் மும்முனை கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

இதுவரை நிறைவடைந்த 4 போட்டிகளின் முடிவில் அவுஸ்திரேலிய அணி 3 வெற்றியுடன் 13 புள்ளிகள் பெற்று இறுதிப்போட்டிக்கு நேரடியாக தகுதி பெற்றுள்ளது.

இங்கிலாந்து அணி ஒரு வெற்றி, 2 தோல்வியுடன் 5 புள்ளிகளுடனும், இந்தியா தான் மோதிய 2 போட்டிகளிலும் தோல்வியுற்று புள்ளிகள் எதனையும் பெறாமல் கடை நிலையிலும் உள்ளன.

இந்நிலையில் தொடரின் 5ஆவது லீக் போட்டி அவுஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையில் இன்று சிட்னியில் நடக்கிறது.

இரண்டு போட்டிகளிலும் தோற்று புள்ளிகள் எதையும் பெறாமல் இருக்கும் இந்தியா, இந்தப் போட்டியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு நுழையும் வாய்ப்பை தக்கவைக்க வேண்டிய நெருக்கடி நிலையில் உள்ளது.

அத்துடன் போனஸ் புள்ளியுடன் வெற்றி பெறுவது அவசியமானது. தோற்றால் இங்கிலாந்துக்கு எதிராக போனஸ் புள்ளியுடன் அதிக ரன் வித்தியாசத்தில் வெல்ல வேண்டிய நெருக்கடி ஏற்படும்.

துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் இந்தியாவின் நிலை மோசமானதாக இருக்கிறது. இதன்விளைவே இங்கிலாந்துக்கு எதிராக 153 ஓட்டங்களில் சுருண்டது. இதேபோல பந்துவீச்சாளர்களும் விக்கெட்டுகளை கைப்பற்ற முடியாமல் திணறுகிறார்கள்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சதம் அடித்த ரோஹித் சர்மா காயம் காரணமாக இங்கிலாந்துடனான போட்டியில் ஆடவில்லை. இன்றைய போட்டிக்கு அவர் உடல் தகுதி பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4ஆவது வரிசையில் ஆடுவதால் விராட் ஹோலி கடந்த 2 போட்டியில் ஓட்டங்கள் சேர்க்கவில்லை. இதனால் 3ஆவது வரிசையில் ஆடுவாரா? அதே நிலையில் இருப்பாரா? என்று தெரியவில்லை.


அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரை ஸ்ரீபன் ஸ்மித், ஆரோன் பின்ஞ் ஆகியோர் துடுப்பாட்டத்திலும், ஸ்ரார்க், போல்க்னர் பந்துவீச்சிலும் நல்ல நிலையில் உள்ளனர். போட்டித் தடை காரணமாக கடந்த போட்டியில் விளையாடாத அணித் தலைவர் பெய்லி அணிக்கு திரும்பியுள்ளார். அத்துடன் தசைப்பிடிப்பால் கடந்த போட்டியில் விளையாடாத டேவிட் வோர்னரும் குணமடைந்து விட்டதால் அணிக்கு கூடுதல் பலம்.

இன்றைய போட்டி இலங்கை நேரப்படி காலை 8.50 மணிக்கு ஆரம்பமாகிறது.



# காலிறுதிக்கு முன்னேறினார் ரஷ்யாவின் ஷரபோவா

## ☆ஆஸி ஓபன் டென்னிஸ்



ரஷ்யாவின் அழகிய டென்னிஸ் புயல் மரியா ஷரபோவா, சீனாவின் பெங்கை தோற்கடித்து காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

2008ஆம் ஆண்டு சம்பியனும், உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையுமான மரியா ஷரபோவா (ரஷ்யா) நேற்று நடந்த 4ஆவது சுற்று ஆட்டத்தில் சீனாவை சேர்ந்த 21ஆம் நிலை வீராங்கனையான பெங்கை எதிர்கொண்டார்.

இதில் ஷரபோவா 6:3, 6:0 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார். அவர் காலிறுதியில் கனடாவை சேர்ந்த 7ஆம் நிலை வீராங்கனை பவுச்சர்ட்டை சந்திக்கிறார்.

பவுச்சர்ட் 4ஆவது சுற்று ஆட்டத்தில் 6:1, 5:7, 6:2 என்ற கணக்கில் ருமேனியாவை சேர்ந்த இரினா கேமிலாவை வீழ்த்தினார்.

தரவரிசையில் 10ஆவது நிலையில் இருக்கும் மகரோவா (ரஷ்யா) 6:3, 6:2 என்ற கணக்கில் ஜூலியாவை (ஜேர்மனி) வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். இதில் அவர் ஷிமோனா ஹெல்ப் (ருமேனியா) அல்லது யானினாவை (பெல்ஜியம்) எதிர்கொள்கிறார்.

## பிரதம நீதியரசர்...

அவர் தொடர்ந்தும் பிரதம நீதியரசர் பதவியில் நீடித்தால் அவர் மீது நியாயமான விசாரணையை மேற்கொள்ள இயலாத அளவுக்கு பொலிஸாருக்கு அழுத்தங்கள் ஏற்படலாம் என்று ஜனநாயகத்தை காக்கும் வழக்கறிஞர்களின் சங்கம் சந்தேகம் எழுப்பியுள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் வழக்கறிஞர் லால் விஜேநாயக்க இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை இரத்துச் செய்துவிட்டு தேர்தல் வெற்றியை தடுப்பதற்கு முன்னாள் ஜனாதிபதியுடன் சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள தலைமை நீதிபதி மொஹான் பீரிஸ் உட்பட பலருக்கு எதிராக பொலிஸ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு சாதாரண அரச ஊழியர் மீது குற்றச்சாட்டொன்று சுமத்தப்படும்போது அவரது சேவை நிறுத்தப்பட்ட பின்னரே அவர் மீதான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆயினும் தலைமை நீதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டொன்று சுமத்தப்பட்டுள்ள போதும அவர் தொடர்ந்து பதவி வகித்து வந்தால் அதன மூலம் விசாரணை மேற்கொள்ளும் குழுக்களுக்கு தமது பணியை சுயாதீனமாக மேற்கொள்ள முடியாது. தமக்கு எதிரான விசாரணை மீது அழுத்தங்களை கொடுப்பதற்கு தலைமை நீதிபதிக்கு அவகாசமும் வாய்ப்புக்களும் இருக்கின்றது.

இதன் காரணமாக சம்பந்தப்பட்ட விசாரணை முடிவடையும் வரை தலைமை நீதிபதி தமது பதவியை கைவிடவேண்டும் என்று வலியுறுத்தினார் ஜனநாயகத்தை காக்கும் வழக்கறிஞர் சங்கத்தலைவர் வழக்கறிஞர் லால் விஜேநாயக்க.

இதுபோன்று குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளும் உச்சநீதிமன்ற நீதிபதிகளை துரிதமாக பதவி நீக்கக்கூடிய ஒரு சட்ட விதிமுறையொன்றை இலங்கையில் கொண்டுவருவது அவசியமென்றும் வழக்கறிஞர் லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் யாப்புக்கு அமைய குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுக்கும் நீதிபதிகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும கண்டனத் தீர்மானமொன்றின் மூலமே பதவி நீக்க முடியும். இது நீண்டகாலம் எடுக்கக்கூடிய ஒரு கடினமான விதிமுறை என்றும், இந்த விதிமுறையின்கீழ் கொலைக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால் கூட ஒரு நீதிபதியின் கடமைகளை நிறுத்த முடியாது என்றும் தெரிவித்த விஜேநாயக்க, குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் நீதிபதிகளை பதவி நீக்கக்கூடிய சட்டவிதிமுறையொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கூறினார். (எ-1)

## 100 நாள் திட்ட...

பொலநறுவையில் நேற்றைய தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் பாரியளவில் அரச சொத்துக்கள் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

தேர்தலில் தோல்வியைத் தழுவியிருந்தால உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் எனவும், குடும்பத்தினரை கைது செய்ய முயற்சிக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் பல்வேறு தரப்பினர் தமது வெற்றிக்காக ஒத்துழைப்பு வழங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் அழைப்பினை ஏற்றுக்கொண்டு கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதாகவும், நூறு நாள் திட்டத்திற்கு சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களும் ஆதரவளிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் சாசனத்தில் திருத்தங்களைச் செய்ய மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அவசியமாகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

பொலநறுவை மாவட்டத்தையும் ஏனைய பகுதிகளையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (எ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமாவை...

உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று காலை இந்தியாவு க்கு சென்றார். புது டில்லியில் இன்று இடம்பெறும் இந்தியக் குடிய ரசு தின நிகழ்வில் அவர் கலந்து கொள்ள வுள்ளார்.

இந்நிலையில், இவரின் புது டில்லிக்கான பயணத்தைச் சீர்குலைக்க இஸ்லாமிய தீவிர வாதிகள் முயற்சிகளை மேற்கொள்ளலாம் என இந்திய புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

குறிப்பாக, இலங்கை அல்லது மாலைதீவு நாட்டைச் சேர்ந்தவர்களைக் கொண்டு பராக ஒபாமா மீது தாக்குதல் நடத்த அவர்கள் திட்ட மிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென்னிந்தியாவில் உள்ள அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்தும் இதுபோன்ற ஒரு திட்டம் இந்தியப் புலனாய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப் பட்டு ஏற்கெனவே முறியடிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மீது இலங்கையைச் சேர்ந்தவர்கள் குறிவைக்கலாம் என்று புதுடில்லி பொலி ஸாருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்தியாவில் தங்கியுள்ள இல ங்கையர்கள் கடும் கண்காணிப்புக்கு உள் ளாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மற்றும் மாலைதீவு நாட்டைச் சேர்ந்தவர்களை தீவிரமாக கண்காணிக்கும படி புதுடில்லி பொலிஸாருக்கும், படைத்தரப் பினருக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ-1)


## பதவி வெற்றிடங்கள்

பல் தேசிய நிறுவனம் ஒன்றில் O/L சித்தியடைந்தவர்கள் & A/L படித்தவர்களுக்கான பணிநிலை வெற்றிடங்கள் உள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தோர் விண்ணப்பிக்கலாம்.

தகுதியானவர்கள் சுயவிபரக்கோவையுடன் 27.01.2015–29.01.2015 நேர்முகத்தேர்வுக்குத் தோற்றவும்.

**தொடர்புகளுக்கு:-0777981471, 0775566224, 0214545634**

(சி-9931)

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

**இடம் : யாழ் புத்தகசாலை (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) (305, 307, 309 ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை) (பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க)**

**காலம் : 29.12.2014 முதல் 15.02.2015 வரை**

**நேரம் : காலை 8.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை (ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)**

**யாழ். புத்தகசாலை**

305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)

(C-9927)

**தொடர்புகளிற்கு : 077 8349 507, 021 4545 552**

விசேட விலைக்குறைவு
25/01/2015-25/02/2015 வரை

மிகத் துல்லியமான, உயர் தரத்திலான



6 கலர்ஸ்

டிஜிற்றல் பனர் பிறின்டிங்

(சி-9924)

டிஜிற்றல் பனர், டிஜிற்றல் ஸ்ரிக்கர்கள்
விளம்பரப் பெயர்ப் பலகைகள்
மற்றும்
பந்தல் தட்டிகள், முகப்புகள்,
ஆலய திரை அலங்காரங்கள்
என்பன உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஜனா டிஜிற்றல் பிறின்டிங்
JANA DIGITAL PRINTING

மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

T.P; 021 221 3233
077 0731654


# புதிய...

கம் யூனிஸ்ட் கட்சி, சமசமாஜ கட்சி, பிவித்துரு ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து வருகின்றன.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை இந்த கூட்டணியில் இணைத்து கொள்வது குறித்தும் பேசப்பட்டு வருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரும், ஓய்வு பெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் சிலரும் தேர்தலில் வேட்பாளர்களாக களமிறக்கப்பட உள்ளனர்.

பேரினவாத மற்றும் தேசியவாத கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த கூட்டணி அமைக்கப்பட வுள்ளதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன. (எ-1)

# சின்னத்தில்...

களும் யானை சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றன.

எனினும் அந்த கூட்டணியின் சிலத் தரப்பினர் ஜனாதிபதி தேர்தல் போன்று அன்னப்பறவை சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று கோரி வருவதாக கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஐக்கிய தேசிய கட்சி இது தொடர்பில் இன்னும் எந்த தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என்று கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிறிலங்கா சுதந்திர கட்சி கை சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கை கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் முன்வைப்பதாக கூறப்படுகிறது.

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்த கட்சிகள் வெற்றிலைச் சின்னத்திலேயே அடுத்த தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-1)

# ஜெனிவாவில்...

பற்றி அறிவிக்கையில் விபரிக்கப்பட உள்ளது.

இதனிடையே வெளிநாட்டு விவகாரங்கள் சம்பந்தமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஜயந்த தனபால ஜெனிவா மனித உரிமை ஆணையாளரை சந்திக்க உள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழு இலங்கை தொடர்பாக நடத்தும் விசாரணைகள் தொடர்பான கருத்துக்களை ஆணையாளருடன் தனபால பரிமாறிக்கொள்ள உள்ளதாக தெரியவருகிறது. (எ-1)

# ஆட்சியை...

உத்தரவை ஏற்க மறுத்தனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவது பற்றி பேசியதாக உதய கம்மன்பில கூறுகி றார். தேர்தல் முடிவுகள் வெளியாகி வரும் நேரத்தில் ஏன் அவசரமாக ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். ஏன் இந்த குழப்பம்?

மட்டக்குளி ரொக் ஹவுஸ் முகாமிற்கு 3 ஆயிரம் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டிருந்தனர். நியூன் ஹெல்ல என்பவரும் புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஒருவரும் அங்கு இருந்தனர்.

சீருடையில் உள்ள சின்னங்கள் மற்றும் தொப்பியில் உள்ள சின்னங்கள் என்பவற்றை அகற்றுமாறு இராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அவை இருந்தால், எந்த படைப்பிரிவு என்பதை அடையாளம் கண்டு விடலாம் என்பதே இதற்கு காரணம்.

எனினும் அலரி மாளிகையில் அந்த நேரத்தில் இருந்த சிலர் இராணுவ சதித்திட்டத்தை ஏற்க மறுத்தனர். இந்த சம்பவத்தை உறுதிப்படுத்த சாட்சியங்கள் இருக்கின்றன எனவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஏப்ரலில்...

வருடங்களுக்குள் புதிய அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறினார்.

இதற்கு முந்தைய அரசினால் செயலிழக்கச் செய்யப்பட்ட சுயாதீன ஆணைக்குழுவை மீண்டும் செயற்படுத்துவதற்கும் 100 நாட்களில் எஞ்சியுள்ள 84 நாட்களுக்குள் பொது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என்றும் அவர் கூறினார். (எ-1)

# காஸின் விலை...

இதன்போது சமையல் எரிவாயுவின் விலையை குறைப்பது தொடர்பிலான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக அமைச்சர் கூறினார். (எ-1)

# ஸ்ரீ.சு.கவின் செயலர்...

முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றில் முக்கிய பதவியை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-1)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தங்கச்சி தியாகராஜா
(பூமாதேவி)



சங்கானை ஆஸ்பத்திரி வீதியை பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தங்கச்சி தியாகராஜா அவர்கள் 2015.01.24 சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் இராசரத்தினம் சிவபாக்கியம் அவர்களின் அன்பு மகளும், சுப்பிரமணியம் தியாகராஜாவின் (பத்திரிகை விற்பனையாளர் சித்தன்கேணி, ஓய்வுபெற்ற இ.போ.ச உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், சுசிலாதேவி (கனடா), ரவீந்தினி (திருகோணமலை), லலிதா (ஜேர்மனி), விமலா (லண்டன்), சுமதி (ஜேர்மனி), ஜெயரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரசூரியர், பத்மநாதன், தயாநிதி, சிவனருள், சுஜீவாகரன், கஜதீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,

அமரர் நாகராசா, தியாகராசா (சிறீ-பிரான்ஸ்), இராசகுமார் (அப்பப்பு-கனடா), தனேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினவல்லி, ஜெயராஜா (கனடா) அமரர் சர்வகுலராசா, மகேந்திரராஜா, சுந்தர்ராஜா, சிவராஜா (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 2015.01.27 செவ்வாய்க்கிழமை நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சங்கரத்தை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கணவர் சுப்பிரமணியம் தியாகராஜா (சித்தன்கேணி)
(சி-9930) தொலைபேசி இல:-0212250028


Digital
இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101
(C-9926)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org